மலர்-3 இதழ்-55 டிசம்பர் 1-15 2018 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளியிடப்படும் இதழ்




## மரணத்தை வெல்லும் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய சிறந்த

# மார்கழி மாதம்

# 7ன் மகத்துவங்கள்

## ரிஷிகள் ஏழு

அகத்தியர்,
காசியபர்,
அத்திரி,
பரத்வாஜர்,
வியாசர்,
கவுதமர்,
வசிஷ்டர்.

## கன்னியர்கள் ஏழு

பிராம்மி,
மகேஸ்வரி,
கௌமாரி,
வைஷ்ணவி,
வராகி,
இந்திராணி,
சாமுண்டி

## சஞ்சீவிகள் ஏழு

அனுமன்,
விபீஷணர்,
மகாபலி சக்கரவர்த்தி,
மார்க்கண்டேயர்,
வியாசர்,
பரசுராமர்,
அசுவத்தாமர்.

## தலங்கள் ஏழு

வாரணாசி,
அயோத்தி,
காஞ்சிபுரம்,
மதுரா,
துவாரகை,
உஜ்ஜைன்,
ஹரித்வார்.

## மழையின் வகைகள் ஏழு

சம்வர்த்தம் மணி (ரத்தினக் கற்கள்)
ஆவர்த்தம் நீர் மழை
புஷ்கலாவர்த்தம் பொன் (தங்க) மழை
சங்காரித்தம் பூ மழை (பூ மாரி)
துரோணம் மண் மழை
காளமுகி கல் மழை
நீலவருணம் – தீ மழை (எரிமலை, சுனாமி)

## தலைமுறைகள் ஏழு

நாம் ........................................முதல் தலைமுறை
தந்தை + தாய்........................இரண்டாம் தலைமுறை
பாட்டன் + பாட்டி ....................மூன்றாம் தலைமுறை
பூட்டன் + பூட்டி ......................நான்காம் தலைமுறை
ஓட்டன் + ஓட்டி ......................ஐந்தாம் தலைமுறை
சேயோன் + சேயோள்.............ஆறாம் தலைமுறை
பரன் + பரை...........................ஏழாம் தலைமுறை

## ஜென்மங்கள் ஏழு

தேவர்
மனிதர்
விலங்கு
பறவை
ஊர்வன
நீர்வாழ்வன
தாவரம்

## வள்ளல்கள் ஏழு

பேகன்,
பாரி,
காரி,
ஆய்,
அதிகன்,
நள்ளி,
ஓரி.

## சக்கரங்கள் ஏழு

மூலாதாரம்
ஸ்வாதிஷ்டானம்
மணிபூரகம்
அனாஹதம்
விஷுத்தி
ஆக்னா
சகஸ்ராரம்

## கொடிய பாவம் ஏழு

உழைப்பு இல்லாத செல்வம்
மனசாட்சி இலாத மகிழ்ச்சி
மனிதம் இல்லாத விஞ்ஞானம்
பண்பு இல்லாத படிப்பறிவு
கொள்கை இல்லாத அரசியல்
நேர்மை இல்லாத வணிகம்
சுயநலம் இல்லாத ஆன்மிகம்

## கொல்லும் பாவம் ஏழு

ஆணவம்
சினம்
பொறாமை
காமம்
பெருந்துனி
சோம்பல்
பேராசை

## நதிகள் ஏழு

கங்கை
யமுனை
கோதாவரி
சரஸ்வதி
நர்மதா
சிந்து
காவிரி

## பெண் பருவம் ஏழு

பேதை
பெதும்பை
மங்கை
மடந்தை
அரிவை
தெரிவை
பேரிளம் பெண்

## ஆண் பருவம் ஏழு

பாலன்
மீளி
மறவோன்
திறவோன்
விடலை
காளை
முதுமகன்

## திருமணத்தின் போது அக்னியை சுற்றும் அடிகள் ஏழு

**முதல் அடி..**
பஞ்சமில்லாமல் வாழ வேண்டும்.
**இரண்டாம் அடி..**
ஆரோக்கியமாக வாழ வேண்டும்.
**மூன்றாம் அடி..**
நற்காரியங்கள் எப்பொழுதும் நடக்க வேண்டும்.
**நான்காவது அடி...**
சுகத்தையும், செல்வத்தையும் அளிக்க வேண்டும்.
**ஐந்தாவது அடி....**
லக்ஷ்மி கடாக்ஷம் நிறைந்து பெற வேண்டும்.
**ஆறாவது அடி...**
நாட்டில் நல்ல பருவங்கள் நிலையாக தொடர வேண்டும்.
**ஏழாவது அடி...**
சனாதன தர்மத்துடன்..
தர்மங்கள் நிலைக்க வேண்டும்.

# மூலஸ்தானம்

இந்து சமயத்தில் கோவில்களுக்கும், மனித வாழ்வியல் முறைக்கும் ஒன்றோடு ஒன்று தொடர்பு உள்ளதைப் போன்று அமையப்பெற்றிருக்கும். இந்த வகையில் திருக்கோயில்களில் உள்ள மூலஸ்தானம் எனும் கருவறையின் தேவ ரகசியம் பற்றி எளிமையாக அறிந்து கொள்ளலாம்.

மனிதனுக்கு தலைதான் பிரதானம். தலையில் இருந்து பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் உடலில் மற்ற அங்க, அவயங்களை செயல்பட வைக்கிறது. இதே மாதிரிதான் ஆலய அமைப்பும் உள்ளது. உடலுக்கு தலை பிரதானம் போல ஆலயங்களுக்கு கருவறை பிரதானமாக உள்ளது. இதை மூலஸ்தானம், கர்ப்பக்கிரகம் என்றும் சொல்வார்கள்.

நமது உடல் பிரமாண்டமாக இருந்தாலும், தலை சிறியதாகத்தான் இருக்கும். அது மாதிரிதான், ஆலயங்கள் எத்தனை பெரிதாக இருந்தாலும் கருவறை சிறியதாகவே இருக்கும். இதன் பின்னணியில் சூட்சமங்களும், தேவ ரகசியமும் அடங்கியுள்ளன. வாஸ்து கணக்கு பிரகாரம், நீள, அகல, உயரங்களை மிகத் துல்லியமாக கணக்கிட்டு ஆலயங்களை உருவாக்கிய நம் முன்னோர்கள், பிரபஞ்ச சக்திகளை கிரகிக்கும் பகுதியாக கருவறையை அமைத்தனர்.

பிரபஞ்சத்தில் உள்ள கதிர்கள் எல்லாம் ஒரு வகை மின்னூட்டம் பெற்ற துகள்களாகும். இந்த அலைகள் கோவில் கருவறை விமானம் மீதுள்ள கலசங்கள் மூலம் கருவறைக்குள் இருக்கும் மூலவர் மீது பாயும். பிறகு அங்கிருந்து அந்த அலைகள் ஆலயம் முழுக்க விரவிபரவும். எனவேதான் ஆலயங்களுக்கு செல்லும்போது நமது ஆற்றல் அதிகரிக்கிறது.

இதற்காகவே நம் முன்னோர்கள் கருவறை அமைப்பதில் மட்டும் அளவு கடந்த நுட்பத்தை கடைபிடித்தனர். எல்லா ஆலயங்களிலும் கருவறையானது, வாசல் தவிர மற்ற அனைத்துப் பகுதிகளும் மூடப்பட்டதாக இருக்கும். கருவறை அமைப்பை 6 பகுதிகளாகப் பிரிக்கலாம். அவை

1. அதிஷ்டானம்,
2. பாதம்,
3. மஞ்சம்,
4. கண்டம்,
5. பண்டிகை,
6. ஸ்தூபி

எனப்படும். இதில் மூலவர் சிலை நிறுவப்படும் பகுதியை அதிஷ்டானம் என்பார்கள். பீடம் என்றும் சொல்வதுண்டு. கருவறையின் வெளிப்புறச்சுவரை கோஷ்டம் என்பார்கள். அவற்றில் பல்வேறு கடவுள் உருவங்கள் இடம் பெற்றிருக்கும். ஒரு கோவில் எந்த மூர்த்திக்கு உரியதோ, அந்த மூர்த்தியை அங்கு பிரதிஷ்டை செய்திருப்பார்கள்.

அது மட்டுமின்றி அந்த கருவறை எத்தனை ஆண்டுகளைக் கடந்தாலும் இறை அருளை அள்ளித்தரும் பொக்கிஷமாக இருக்கவும் வழி வகுத்திருந்தார்கள். இந்த நடைமுறை 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அதாவது ஆகம வழிபாட்டு முறைகளுக்கும் முன்பே தோன்றி விட்டது.

அந்த காலக் கட்டத்தில் நாட்டை ஆண்ட மன்னர்கள், தங்களது அரண்மனையை விட அருள் அலை தரும் கோவில்கள் எப்போதும் உறுதியாக நின்று நிலைப் பெற்று திகழ வேண்டும் என்ற எண்ணத்தில் கற்களால் ஆன கருவறையைக் கட்டினார்கள். அவர்கள் பெருங்கோவில், மாடக்கோவில், கரக்கோவில், ஞாழற் கோவில், கொகுடிக் கோவில், இளங்கோவில், மணிக்கோவில், ஆலக்கோவில் என்று 8 வகைக் கோவில்களைக் கட்டினார்கள்.

ஆனால் கருவறை பகுதி சதுரம், வட்டம், முக்கோணம் எனும் 3 வித அமைப்புகளில் அமைக்கப்பட்டன. இதில் சதுர அமைப்பு தேவ உலகத்துடனும், வட்டம் இறந்தவர்களுடனும், முக்கோணம் மண்ணுலகத்துடனும் தொடர்புடையதாக கருதப்படுகின்றன. தமிழ்நாட்டில் முக்கோண அமைப்புடன் ஆலய கருவறை அமைப்பதில்லை. வட்ட வடிவ கருவறைகளை புத்த ஸ்தூபிகளிலும் பள்ளிப்படை கோயில்களிலும் மட்டுமே காணமுடியும்.

என்றாலும் மதுரை அழகர்கோவிலில் உள்ள ஆலயக் கருவறை வட்ட வடிவில் இருப்பது ஆச்சரியமானது. மற்றபடி தமிழக ஆலயங்களில் கருவறை சமசதுர வடிவில்தான் இருக்கும். கருவறை சுற்றுப்பகுதி ஆலயத்துக்கு ஆலயம் மாறுபடும். தொன்மை சிறப்பு வாய்ந்த ஆலயங்களில் கருவறை வெளிப்பகுதி ‘‘கஜப்ருஷ்டம்’’ வடிவில் இருக்கும்.

கஜம் என்றால் யானை, ப்ருஷ்டம் என்றால் பின்பகுதி என்று பொருள். ஆக கருவறை வெளிப்புற சுவர் யானையின் பின் பகுதி போன்ற வடிவில் இருக்கும் என்று அர்த்தம். இத்தகைய அமைப்பை ‘‘தூங்கானை மாடக்கோவில்’’ என்பார்கள். அதாவது ஒரு யானை முன்னங்கால்களை முன்புறம் நீட்டியும், பின்னங்கால்களை பின்புறம் மடித்தும் படுத்திருப்பதைப் போன்று காணப்படும்.

இத்தகைய கருவறையை நம் முன்னோர்கள் சாதாரணமாக அமைத்து விடவில்லை. கோவில் கட்ட தேர்வு செய்யப்படும் இடத்தில் தானியங்களை விதைப்பார்கள். அந்த தானியங்கள் மூன்று நாட்களில் முளைத்து விட்டால் உத்தமமான இடம். 5 நாட்களில் முளைத்தால் மத்திமம். 5 நாட்களுக்கு



பிறகு அதமம். மத்திமம், அதமமான இடங்களில் கருவறை கட்ட மாட்டார்கள். உத்தமமான இடத்தில் மட்டுமே கருவறையை அமைப்பார்கள்.

இது பிரபஞ்ச சக்திகளை ஒன்று திரட்டி தரும் தலமாக மாறும் என்று நம் மூதாதை யர்கள் கணித்துதான் கோவில்களையும் கருவறை களையும் கட்டினார்கள். கருவறைக்குள் வைரம், வைடூரியம், தகடுகள், கருங்கற்கள், சுட்ட கற்கள், ஆற்று மணல் போன்றவற்றை போட்டு நிரப்பும் வழக்கமும் இருந்தது.

சுண்ணாம்பு, கடுக்காய், தானிக்காய், நெல்லிக்காய் ஆகியவற்றை கலந்து அரைத்து பூசி கருவறையை உருவாக்குவதை கர்ப்பக கிரக லட்சணம் என்றனர். கர்ப்பக்கிரக சதுர அளவு 1 தண்டம் எனப்படும். இதன் அடிப்படையில்தான் ஆலயத்தின் மற்ற பகுதி அமைப்புகள் இருக்கும். உள்பிரகாரம் ஒரு தண்ட அளவு விஸ்தாரத்துடனும், இரண்டாம் பிரகாரம் இரண்டு தண்ட விஸ்தாரத்துடனும், மூன்றாம் பிரகாரம் 4 தண்ட விஸ்தார அளவுடனும், நான்காம் பிரகாரம்7 தண்ட விஸ்தார அளவுடனும் இருத்தல் வேண்டும்.

இப்படி நம் முன்னோர்கள் கருவறையை பார்த்து, பார்த்து பரிசோதித்து கட்டினார்கள். சங்க காலத்தில் கருவறையை நம் முன்னோர்கள் திருவுண்ணாழிகை என்றழைத்தனர். கருவறை வலுவாக இருக்க வேண்டும் என்பதிலும் நம் முன்னோர்கள் மிகவும் கவனம் செலுத்தினார்கள். தேப்பெருமா நல்லூரில் உள்ள சிவாலய கருவறை தேன் கலந்த சுண்ணாம்பால் கட்டப்பட்டது.

பெரும்பாலான கருவறைகள் இப்படித்தான் கட்டப்பட்டுள்ளன. அது போல கருவறை வடிவமைப்பிலும் மிகுந்த நுட்பம் கடைபிடிக்கப்பட்டது. சிதம்பரம் நடராஜர் ஆலய கருவறை இதயம் போன்றது. வேலூர் அருகே விரிஞ்சிபுரத்தில் உள்ள மார்க்கபந்தீஸ்வரர் ஆலய கருவறை ஓங்கார வடிவத்துடன் இருக்கிறது.

கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள பிரகதீஸ்வரர் ஆலய கருவறை அமைப்பு ஆச்சரியப்படத்தக்கது. சந்திரகாந்த கல்லால் உருவான இந்த கருவறை வெயில் காலத்தில் குளிர்ச்சியாகவும், குளிர்காலத்தில் வெப்பமாகவும் இருக்கும். இப்படி பல சூட்சமங்கள் கொண்ட கருவறையை நமது முன்னோர்கள் சற்று இருட்டாக வைத்தனர்.

அதிலும் ஒரு அறிவியல் பின்னணி உள்ளது. கருவறை விமான கலசம் மூலம் சூரிய கதிர்களின் அலை, மூலவர் சிலைக்கு கடத்தப்படும். அதே சமயம் சிலைக்கு அடியில் உள்ள யந்திரம் பூமிக்கு அடியில் இருந்து கிடைக்கும் ஆற்றல்களை மூலவர் சிலைக்கு கடத்தும். இதனால் கருவறையில் இறை ஆற்றல்கள் அனைத்தும் ஒன்று திரண்டு நிரம்பியிருக்கும்.

கருவறை சற்று இருட்டாக இருந்தால்தான் அந்த இறை ஆற்றல்கள் ஆலயத்தின் மற்ற பகுதிகளுக்குப் பரவும். இந்த விஞ்ஞான உண்மையை நம் முன்னோர்கள் அறிந்திருந்ததால்தான் அவர்கள் ஆலய கருவறையை சற்று இருளாக இருக்கும்படி செய்தனர். அது மட்டுமின்றி அந்த இறை ஆற்றல்களைப் பெற தினமும் ஆலயங்களுக்கு செல்ல வற்புறுத்தினார்கள்.

ஆனால் நம்மில் பெரும்பாலானவர்கள் கருவறையின் ஆற்றலையும் அருமையையும் புரிந்து கொள்ளாமலே இருக்கிறோம். நாம் வீட்டில் வழிபட்டால் 10 சதவீத ஆற்றலே கிடைக்கும். கோவில் பிரகாரத்தில் வழிபட்டால் 100 சதவீத ஆற்றல் பெறலாம். குளத்தில் வழிபட்டால் 1000 மடங்கு பலனும், ஆற்றில் வழிபட்டால் லட்சம் பங்கு பலனும், அருவிக்கரை பகுதிகளில் வழிபட்டால் 1 கோடி பங்கு பலனும், கடற்கரையில் வழிபட்டால் 2 கோடி பங்கு பலனும், ஜீவசமாதிகளில் வழிபட்டால் 10 கோடி பங்கு பலனும் கிடைக்குமாம்.

ஆனால் ஆலய கருவறை முன்பு நாம் வழிபாடு செய்தால் பலநூறு கோடி அளவுக்கு ஆற்றல்களை பெற முடியுமாம். இதில் இருந்தே நாம் கருவறை முக்கியத்துவத்தை உணர்ந்து கொள்ளலாம். எல்லா இடங்களிலும் காந்த அலைகள் இருந்தாலும் கருவறையில்தான் அவை நமக்கு ஆற்றல் தரும் சக்தியாக மாறுகிறது என்பதை யாராலும் மறுக்க முடியாது.

இதை கருத்தில் கொண்டே கருவறை எல்லா பக்கமும் மூடப்பட்டுள்ளது. கருவறையில் ஒரே ஒரு விளக்கு தொங்க விட்டிருப்பார்கள். அல்லது விக்கிரகத்துக்கு பின்னால் ஒரு செயற்கை ஒளி வட்டத்தை ஏற்படுத்தி இருப்பார்கள். இவை தான் கருவறையில் உள்ள இறை ஆற்றல்களை வெளிப்பக்கத்துக்கு எகிற செய்கிறது. தினம், தினம் இந்த இறை ஆற்றல்கள் திரண்டு வெளி வருகிறது. அதனால்தான் கருவறையில் பால், பஞ்சாமிர்தம், தயிர், சந்தனம், குங்குமம், விபூதி, எண்ணை என எந்த பொருள் கொண்டு அபிஷேகம் செய்தாலும் அவை நாற்றத்தை ஏற்படுத்துவதில்லை. அதற்கு பதில் கருவறையில் வைக்கப்படும் தண்ணீர் தீர்த்தமாக மாறுகிறது.

கருவறை நைவேத்தியங்கள் மகத்துவம் பொருந்திய மருந்தாக மாறுவதற்கு இறை ஆற்றல் களே காரணமாகும். கருவறையில் மூலவருக்கு அபிஷேகம் செய்யப்படும் போதும், நைவேத்தியம் படைக்கும்போதும் திரை போட்டு மூடி விடுவார்கள். தீபாராதனை காட்டும்போது திரையை விலக்குவார்கள். இதிலும் விஞ்ஞான தத்துவமே பின்புலமாக உள்ளது.



கருவறையை திரை போட்டு மூடி இருக்கும் போது இறை ஆற்றல்கள் தேங்கிநிற்கும். திரை விலக்கப்பட்டு தீபம் காட்டப்பட்டதும், அந்த ஆற்றல்கள் அப்படியே திரண்டு வந்து வெளியில் இரு பக்கமும் வரிசையில் நிற்பவர்கள் மீது அருள் வெள்ளமாக பாயும். இந்த இறை ஆற்றல்கள், அலைகள் நமது மூளையை சுத்தப்படுத்தி நம்மை புத்துணர்ச்சி பெறச் செய்யும்.

இதை கருத்தில் கொண்டுதான் சித்த சுவாதீனம் அடைந்தவர்களை கோவில் வளாகத்தில் கட்டி வைக்கும் வழக்கம் ஏற்பட்டது. கோவிலில் தயாரிக்கப்படும் நைவேத்தியங்கள் சுவைமிக்கதாக மாறுவதற்கும், அபிஷேக நீர் நமது உடம்பில்பட்டதும் சிலிர்ப்பை ஏற்படுத்துவதற்கும் கருவறையில் தோன்றி ஆலயம் முழுவதும் பரவும் காந்த அலைகளே காரணமாகும்.

கருவறையில் உருவாகும் சக்தியானது இடமிருந்து வலமாக சுற்றுப்பாதையில் சுற்றுவதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஆனால் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் முன்னோர்கள் இதை கண்டுபிடித்து கருவறையை இடமிருந்து வலமாக நம்மை சுற்ற வைத்து விட்டனர். ஆண்கள் மேல் சட்டை அணியாமல் சுற்றினால் சக்தி அலைகள் நேரடியாக உடலுக்குள் புகுந்து நல்லது செய்யும்.

பொதுவாக கருவறை மூலவர் மூலம் ஆலயம் முழுவதும் காந்த சக்தி அலைகள் பிரம்ம முகூர்த்த நேரத்தில் மிக அதிகமாக பரவும். எனவே பிரம்ம முகூர்த்தத்தில் சென்று முதல் ஆராதனையின் போது வழிபட்டால் அதிக நன்மை பெறலாம். இந்த காந்த அலைகள்தான் கோவிலின் பிரகாரத்தில் உள்ள சன்னதிகள், கொடி மரம், பலி பீடம் போன்றவற்றை கருவறையுடன் ''வயர்லஸ்'' தொடர்பு போல இணைக் கின்றன. எனவே ''பாசிட்டிவ் எனர்ஜி'' பெற கருவறை வழிபாடு மிக, மிக முக்கியமானது.

தொகுப்பு: ஷ்யாம்,


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com



# பூஜை அறை அமைக்கவேண்டிய வழிமுறைகள்

மனதிற்கு நிம்மதியை தருவது ஆண்டவன் சன்னிதி. அது போலவே ஒரு வீட்டில் உள்ள பூஜை அறையும் இருக்க வேண்டும்.

ஒரு வீட்டில் பூஜை அறை வட கிழக்கில் அல்லது வடக்கில் அல்லது கிழக்கில் அமைக்கப்பட வேண்டும். பெரிய வீடாக இருந்தால் வீட்டின் மையப்பகுதியில் பூஜை அறை அமைக்கலாம். ஒரு பெரிய வீட்டில் இரண்டு தளங்கள் இருந்து எல்லோரும் அந்த வீட்டில் ஒரு குடும்பமாக வசித்தால் அவற்றில் தரை தளத்தில் பூஜை அறை இருக்க வேண்டும்.

பூஜை அறையில் கடவுளின் படம் அல்லது உருவம் கிழக்கு திசை பார்த்து இருக்க வேண்டும். அதாவது நாம் வணக்கும் போது கடவுளின் படங்கள் கிழக்கு பார்த்து இருக்க வேண்டும். மேற்கு நோக்கியும் இருக்கலாம். பூஜை அறையின் வழிபடும் பகுதியில் வட கிழக்கு மூலையில் ஒரு பித்தளை சொம்பில் அல்லது டம்ப்ளரில் நீர் பிடித்து வைக்க வேண்டும். இந்த நீரை தினமும் மாற்ற வேண்டும். தென்கிழக்கு மூலையில் குத்து விளக்கை வைத்து விளக்கேற்ற வேண்டும். முக்கியமாக கவனிக்க வேண்டியது, பூஜை அறையில் இறந்து போன முன்னோர்களின் புகைப் படங்களை வைக்கக் கூடாது.

பூஜை அறையை குப்பைகள் இன்றி சுத்தமாக வைத்திருக்க வேண்டும். பூஜை அறை சுவர்களின் வண்ணம் வெள்ளை அல்லது இள மஞ்சள் அல்லது நீல நிறத்தில் இருக்க வேண்டும். பூஜை அறையை வழிபடுவதற்கு, தியானம் செய்வதற்கு மட்டும் பயன் படுத்த வேண்டும். சில வீடுகளில் இடப் பற்றாக்குறை காரணமாக படுக்கை அறை அல்லது சமையல் அறை சுவர்களில் உள்ள அல மாரிகளை பூஜை அறையாக பயன்படுத்துவதுண்டு. அப்படி இருந்தால் வழிபடும் நேரம் தவிர அந்த அலமாரியை மூடி வைக்க வேண்டும். அதாவது கதவு இருந்தால் அதை அடைத்து வைக்க வேண்டும். அப்படி இல்லா விட்டால் துணித்திரை கொண்டு மூடி வைக்க வேண்டும்.

சில சமயங்களில் கதவு உள்ள மரப்பெட்டிகளில் கடவுள் படங்களை வைத்து வழிபடுவதும் உண்டு. இதை சமையல் அறையின் வட கிழக்கு மூலையில் வைக்கலாம். பூஜை அறைக்கு இரண்டு கதவுகள் இருக்க வேண்டும். அவை வெளிப்புறமாக திறக்கும்படி இருக்க வேண்டும். ஒரு பூஜை அறை மாடிப்படிகளின் கீழ் அமைந்து இருக்கக் கூடாது. பூஜை அறையில் மந்திர உச்சாடனங்களை தினமும் ஒன்றிரண்டு தடவை ஒலிபரப்பாகும்படி செய்ய வேண்டும் அல்லது நாமும் வாய்விட்டு உச்சாடனம் செய்யலாம். இது வீட்டில் நேர்மறை எண்ணங்களை கொண்டு வரும். அனைத்தையும் விட பூஜை அறையில் மனதை ஒருமுகப்படுத்தி, தீர்க்கமாக நமது பிரார்த்தனையை கடவுளிடம் முன் வைக்க வேண்டும். அது ஒரு நிமிடம் நீடித்தாலும் கூட போதுமானது.



# வீடு அருள் கட்சாட்சத்துடன் விளங்க எளிய வழிமுறை

வீட்டு பூஜை அறையில் சின்னதா அம்மன் அல்லது முருகன் ஐம்பொன் சிலை வைத்து தினமும் அதற்கு பால் ஊற்றி கழுவி விட்டு சந்தனம் குங்குமம் பொட்டு வைத்து, ஊதுபத்தி பற்ற வைத்து, நெய் தீபம் ஏற்றி வைக்கவும். கந்த சஷ்டி கவசம், அம்மன் 108 போற்றி, காயத்ரி மந்திரங்கள் உச்சரிக்கவும். ஏதேனும் மலர்கள் ஒவ்வொரு மந்திரம் சொல்லும்போது அப்பூவை எடுத்து சிலை மீது போட்டு வணங்குங்கள்..உங்கள் வீடு அருள் கட்சாட்சத்துடன் விளங்கும்.. .இதன் பின்னால் நிறைய சூட்சுமம் இருக்கு... ஐம்பொன் சிலையில் ஐந்து விதமான உலோகங்கள் இருக்கு. தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, வெண்கலம்.. இவை அதிக காந்த ஆற்றல் ஈர்ப்பு சக்தி உடையது.. நீங்க பால் அபிசேகம் செய்யும்போது அதன் நற்குணங்களை ஈர்த்துக்கொள்கிறது..இது சுக்ர அம்சம்...செம்பு செவ்வாய் அம்சம்... இரும்பு சனி அம்சம்...தங்கம் குரு அம்சம் வெள்ளி சுக்கிர அம்சம்.நீங்க மந்திரம் சொல்லி பூ போடும்போது பூவில் இருக்கும் நற்குணங்களையும் மந்திர சக்தியையும் சிலை ஈர்த்துக்கொள்கிறது..பிறகு அவை சிலை மூலம் வீடு முழுக்க ஒரே சீராக பரவுகிறது இப்போது உங்க வீடு அதிக மந்திர ஆற்றலை எதிரொலிக்கும் வீடாக மாறுகிறது..காற்று மாசில்லாமல் கிருமிகள் அழிக்கப்பட்டு ,நோய் எதிர்ப்பு சக்தி அதிகம் உள்ள காற்று நிரம்பிய இடமாக அந்த வீடு மாறுகிறது....


ஆன்மிகமலர் மெயில் புக்

www.aanmeegamalar.com

# மரணத்தை வெல்லும் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய சிறந்த மார்கழி மாதம்

ஜோதிடவியலில் மார்கழி மாதம் ஒன்பதாவது மாதமாக கூறப்படுகிறது. சூரியன் தனுசுராசியில் சஞ்சரிப்பது மார்கழி மாதம் என்று அழைக்கப்படுகிறது. இம்மாதம் தேவர்களுக்கு அதிகாலை நேரம் என கருதப்படுகிறது.

மார்கழி 1ம் தேதி தனுர் மாத பூஜை ஆரம்பம். திருமணமாகாத பெண்கள் இன்று முதல் இம்மாதம் முழுவதும் தினசரி பெருமாள் கோயிலுக்கு சென்று தினமும் ஒரு பாசுரம் வீதமாக திருப்பாவை படித்தால் விரைவில் திருமணம் நடைபெறும்.

மனிதர்களாகிய நமக்கு ஒரு வருட காலம் என்பது தேவர்களைப் பொறுத்த வரை ஒரு நாள் கால அளவே ஆகும். அந்த வகையில் கணக்கிட்டால் நமக்கு ஒரு மாதம் என்பது தேவர்களுக்கு 2 மணி நேரம் மட்டுமே. ( 1 மாதத்திற்கு 2 மணி நேரம் வீதம் 12 மாதத்திற்கு 24 மணி நேரம் = 1 நாள்) இதில் தை மாதம் முதல் ஆனி மாதம் வரை வருகின்ற ஆறு மாத காலம் தேவர்களுக்கு பகல் பொழுதாக அமைகிறது.

இந்தக் காலத்தை உத்தராயணம் என்று அழைக்கிறோம். ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரை வருகின்ற ஆறு மாத காலம் தேவர்களுக்கு இரவுப் பொழுதாக அமைகிறது. இதை தட்சிணாயணம் என்று சொல்கிறோம். இந்த தட் சிணாயணத்தின் நிறைவுப் பகுதி அதாவது, தேவர்களைப் பொறுத்தவரை இரவுப் பொழுது நிறைவடையும் காலமான அதிகாலை 4 மணி முதல் 6 மணி வரையான நேரமே மார்கழி மாதம் என்று பொருள் கொள்ளலாம்.

இந்த காரணத்தால்தான் தேவர்களை வரவேற்கின்ற விதமாக மார்கழி மாதத்தில் அதிகாலை 4 மணி முதல் 6 மணிக்குள் வீட்டு வாசலில் பெண்கள் வண்ணக் கோலமிடுவதை வழக்கமாகக் கொண்டனர்.

மனிதர்களாகிய நாமும் தேவர்களுடன் சேர்ந்து பூஜை, வழிபாடு போன்றவற்றை செய்வதால் அந்த மாதத்தில் செய்யப்படும் பூஜைகளுக்கு அதிகமான சக்தி உள்ளதாக கூறுகிறது சாஸ்திரங்கள்.



## ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய சிறந்த மாதம் மார்கழி

ஜோதிட சாஸ்திர ரீதியாக ஆராய்ந்தால், மிருகசீரிஷ நட்சத்திரத்தில் சந்திரன் சஞ்சரிக்கும் காலத்தில் பௌர்ணமி தோன்றும் மாதத்தை 'மார்க்கசிர' என்று வடமொழியிலும் 'மார்கழி' என்று தமிழிலும் அழைக்கிறோம். இந்த மிருகசீரிஷ நட்சத்திரம் ம்ருகண்டு மகரிஷிக்கு உரியது. ஜோதிடப் பிதாமகராகத் திகழ்பவர் ம்ருகண்டு மகரிஷி. இவரது 'ம்ருகண்டு சூத்ரம்' மற்றும் 'ம்ருகண்டு வாக்கியம்' ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே அந்நாளில் பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது. என்றும் சிரஞ்சீவியாக விளங்கும் மார்க்கண்டேயரின் தந்தை இந்த ம்ருகண்டு மகரிஷி என்பதும் மார்க்கண்டேயரின் ஜென்ம நட்சத்திரம் மிருகசீரிஷம் என்பதும் கவனிக்கப்பட வேண்டியவை.

சப்த சிரஞ்சீவிகள் என்றழைக்கப்படும் அஸ்வத்தாமர், மகாபலி, வியாஸர், ஹனுமான், க்ருபாசார்யர், பரசுராமர், விபீஷணர் ஆகிய ஏழு பேருக்கு அடுத்தபடியாக நேரடியாக சிரஞ்சீவிப் பட்டத்தைப் பெற்றவர் மார்க்கண்டேயர். தனது உயரிய பக்தியின் மூலமாக மரணத்தை வென்ற மகாயோகி அவர். மார்கழி மாதத்திற்கு உரிய நட்சத்திரமான மிருகசீரிஷத்தில் உதித்த அந்த இளம் ஞானி தனது 16வது வயதில் மரணம் நிச்சயம் என்பதை உணர்ந்தும் இவ்வுலக சுகங்களை நாடாமல் இறைவனை மட்டுமே சிந்தையில் கொண்டிருந்தார். தனது அபரிமிதமான பக்தியினால் சிவலிங்கத்தைக் கட்டித் தழுவியிருந்த அவரைக் கொண்டு செல்ல நினைத்த எமதர்மனை சிவபெருமான் வதைத்த கதை நாம் அறிந்ததே. மார்க்கண்டேய சரித்திரம் மரணத்தை வெல்லும் மார்கழி என்று இந்த மாதத்தின் பெருமையை நமக்கு உணர்த்துகிறது. எனவேதான் ம்ருத்யுஞ்ஜய ஹோமம் செய்ய மார்கழி மாதத்தை தேர்ந்தெடுப்பார்கள், விவரம் அறிந்தவர்கள்.

## பக்திக்கு முக்கியத்துவம் தரும் மாதம்

அரங்கநாதனையே மணாளனாக அடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு ஆண்டாள் விரதமிருந்த மாதம் இது. அவரது உயரிய பக்தியின் காரணமாகத்தான் அவரால் ஆண்டவன் அடி சேர முடிந்தது. அதே



போன்று ராம நாம ஜபத்தினையே தனது உயிராகக் கொண்டிருக்கும் ஆஞ்சநேயர் பிறந்ததும் மார்கழி மாத அமாவாசை நாளில்.மார்கழி மாதத்தில் வரும் வளர் பிறை ஏகாதசித் திருநாளை வைகுண்ட ஏகாதசி எனக் கொண் டாடுகிறோம். இந்துக்கள் எல்லோருமே விரதம் இருக்கும் நாள் வைகுண்ட ஏகாதசி. விவரம் தெரியாதவர்கள் கூட வைகுண்ட ஏகாதசி நாள் அன்று விரதம் இருப்பதோடு உறங்காமல் கண் விழிக்கவும் செய்வார்கள். அந்த நன்னாளில் அதி காலை வேளையில் ஆலயங்களில் சொர்க்க வாசல் திறக்கப்படுகிறது. அன்றைய தினத்தில் பெருமாளை சேவிப்பவர்கள் சொர்க்கத்தை அடைவர் என்பது சாஸ்திர நம்பிக்கையாகும்.

மார்கழி மாதத்தில் சூரிய பகவான் தனுசு ராசியில் சஞ்சரிப்பதால் இதை தனுர் மாதம் என்றும் அழைப்பார்கள். தனுசு ராசிக்கு அதிபதி குரு பகவான்.

அதாவது, குரு பகவான் வீட்டில் சூரியன் சஞ்சரிக்கும் காலம் இது. நவகிரகங்களில் அரசன் ஆகிய சூரியன், குருகுலவாசம் செய்யும் நேரம் என்பதால் அந்நாளில் அரசர்கள் உட்பட சத்திரியர்கள் யாரும் போர்த் தொழிலில் ஈடுபட மாட்டார்கள். பொதுமக்கள் அனை வரும் ஒன்றாக இணைந்து பக்தி மார்க்கத்தில் ஈடுபட வேண்டிய காலமாக மார்கழியைக் கொண்டிருந்தார்கள் நம் முன்னோர்கள். ‘மாதங்களில் நான் மார்கழி’ என்று கீதையில் கண்ணன் சொன்னது பக்தி மார்க்கத்தால் என்னை அடைய முடியும் என்பதை சுட்டிக்காட்டவே என்பதை நாம் உணர வேண்டியது அவசியம்.

### சுபநிகழ்வு நடக்காததன் காரணம்

நமது சொந்தக் காரியங்களை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு இந்த ஒரு மாதமாவது இறைவனின் மேல் நமது முழு சிந்தனையையும் செலுத்த வேண்டும் என்ற காரணத்தினால்தான் மார்கழியில் திருமணம் முதலான சுபநிகழ்ச்சிகளைத் தவிர்த்தார்கள் நம் முன்னோர்கள். பக்தி மார்க்கத்திற்கு வழிகாட்டும் மாதமாக மார்கழியைக் கருதினார்கள். வீடுபேறு எனும் மோட்சத்தினை அடைய உதவும் மாதம் இது. பீடு என்றால் பெருமை மிகுந்த அல்லது உயரிய என்று பொருள். பீடு உடைய மாதமாகிய இதனை பொருள் மாற்றி பலர் திரித்து இந்த புனிதமான மாதத்தினை பீடை மாதமாக மாற்றிவிட்டனர். தேவர்களுடன், மக்களும் இறை சிந்தனையில் ஈடுபடும்போது சுபநிகழ்சி என்னும் மகிழ்ச்சியால் பக்திக்கு இடர் ஏற்படக் கூடாது என்ற பெரியோரிகளின் உயர்ந்த நோக்கமே மார்கழியில் எந்த சுபநிகழ்ச்சிகளும் நடைபெறாததற்கு உண்மையான காரணமாகும்.

இனியாவது இந்த மார்கழியின் சிறப்பிற்கேற்ப நாமும் அதிகாலையில் எழுந்து தேவர்களுடன் சேர்ந்து பூஜை, அபிஷேகம் போன்றவற்றை செய்து தேவர்களைப் போன்று சிறப்படைவோம்.

– ஆசிரியர்





# எந்த விதத்தில் முடியுமே அந்த வகையில் செய்யும் கைங்கர்யம் உயர்ந்தது

இதனாலெல்லாம் என்ன பெரிய ப்ரயோஜனம் வந்துவிடப் போகிறது என்று எந்த செயலையும் நினைக்கக் கூடாது. ராமாயண அணில் நமக் கெல்லாம் முன்னுதாரணம். அத்தனாம் பெரிய ஸேது பந்தத்தில், ‘நாம் அல்ப ஜந்து, என்ன பெரிய கைங்கர்யம் பண்ணமுடியும்?’ என்று அது நினைத்ததா? அது பண்ணின ஸேவை ராமருக்கு என்ன உபகாரம் பண்ணிற்றோ பண்ணவில்லையோ, அதற்கே பெரிய உபகாரம் பண்ணி விட்டது.

ஸ்ரீராமனின் கருணையை, கர ஸ்பரிசத்தை ஸம்பாதித்துத் தந்துவிட்டது. இப்படி ‘நாம் என்ன பண்ணி கிழிக்கப் போகிறோம்?’ என்று ஒதுங்கியில்லாமல், நம்மாலான தொண்டு செய் தால், மற்றவருக்கு நம்மால் நல்லது நடந்தாலும் நடக்காவிட்டாலும் நமக்கு ஈஸ்வரப் பிரஸாதம் கிடைத்து சித்த சுத்தி லபித்துவிடும்.

ராமாயண அணில் மாதிரி இரண்டு பேரை என் lifetimeல் நினைக்கிறேன். (1944 பிப்ரவரியில்) காஞ்சீபுரத்தில் காமாக்ஷிக்குப் பெரி சாகக் கும்பாபிஷேகம் பண்ணின போது, திருநெல்வேலி யில் ஏதோ சின்ன கடை வைத்திருந்த ஒருவர், ‘என்னால் இதற்கு மேல் பண்ணச் சக்தி



இல்லையே!’ என்று மனஸார வருத்தப்பட்டு நீள மாக எனக்கு ஒரு கடிதாசு எழுதி, ஒரு ரூபாய் மணிஆர்டர் பண்ணியிருந்தார். இதேமாதிரி இளையாத்தங்குடியில் ரொம்பப் பெரிசா முதல் ஸதஸ் (1962 நடைபெற்ற ஆகமசில்பவ்யாஸ பாரத கிராம கலாவித்வத்ஸதஸ்) நடத்தினபோது சென்னையிலிருந்து ஒருத்தர் ஐந்து ரூபாய் அனுப்பி வைத்து, பெரிய டொனேஷன்களோடு கூட இந்த அல்பக் காணிக்கையையும் அங்கீ கரிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண் டிருந்தார். பெரிய டொனேஷனெல்லாம் மறந்து போனாலும், அந்த ஒரு ரூபாயும், இந்த அஞ்சு ரூபாயும் என் மனஸை விட்டுப் போகவில்லை.

முன்னேயே நான் திரும்பத் திரும்பச் சொன்ன மாதிரி நம்முடைய தானம், தொண்டு இவற்றால் மற்றவர்கள் லாபமடைந்தாலும், அடையாவிட்டாலும் நம்முடைய மனஸின் அஹங்காரம் நிச்சயமாகக் குறையும். ஸங்கமாக எல்லாரும் சேருவதால் சமூகத்தில் ஸௌஜன்யம் உண்டாகும்.

எல்லாரும் சேர்ந்து குளம் வெட்டினால், அப்போது கொஞ்சம் கொஞ்சம் நம் அஹம்பாவத் தையும் வெட்டி எடுக்கிறோம். குளத்தில் ஜலம் வருவதைவிட நம் நெஞ்சில் ஈரம் வருகிறதே, அது போதும்! இந்த ஈரம், அன்பு, அருள் பரமாத்ம ஸ்வரூபத்தை நாம் உணருவதற்குப் பிரயோஜனமாகும். ‘பகவானிடத்தில் பக்தி வரவேண்டும், அவனருள் கிடைக்க வேண்டும்’ என்றால் எப்படி வரும்? பரோபகாரம் பண்ணி மனஸ் பக்குவமானால்தான் நிஜ பக்தி வரும். ஈஸ்வராநுக்ரஹமும் வரும்.

எந்தெந்த விதத்தில் முடியுமோ அப்படி நம் அன்பை, வெறும் பேச்சாக இல்லாமல், கார்யத்தில் காட்டினால் பரமேஸ்வரனின் அன்பு நமக்கும் கிடைக்கும்.

– தெய்வத்தின் குரல்



# விதுர நீதி

ஒரு முதியவர் அல்லது பெரியவர், ஒரு இளைஞனின் வீட்டிற்கு வந்தால். அவன் உரிய மரியாதையைக் காட்ட வேண்டும். இல்லாவிட்டால் அவனது உயிர் சக்தியில் சிறிது வெளியேறிவிடும்.

பெரியவர் ஒருவரைப்பார்த்து எழுந்து நின்று வணங்கு பவனுக்கு உயிர் சக்திகிடைக்கும் ஒரு நல்லவர் நம் வீட்டிற்கு வந்தால், அவரை வரவேற்று உட்கார ஆசனம் தர வேண்டும். பிறகு தண்ணீர் கொண்டுவந்து அவரு டைய பாதங்களைக் கழுவ வேண்டும். (அக்காலத்தில் இந்த முறை நடைமுறையில் இருந்து வந்தது, கால மாற்றத்தாலும், சுயமரியாதை போன்ற கலாச்சார அழிவால் இம்முறை நடைமுறையில் தற்போது இல்லை) அடுத்து, அவர் நலன் விசாரித்த பின், நம் குடும்ப நலனைத் தெரிவிக்க வேண்டும். அவர்வந்துள்ள சமயத்திற்கேற்ப உணவுபரிமாற வேண்டும்

வேதங்களை நன்று பயின்றவர்க்கு தண்ணீரோ, தயிரும் தேனும் கலந்த பானமோ, பசுவோ அளிப்பதன் மூலம் நன்மை பெறலாம் என பேராசைப் படுபவர்களிடமிருந்து வேதியர் எதையும் ஏற்க மாட்டார்.

அவர்கள் சாபத்திற்கு பயந்து பொருட்கள் அளிப்பவர்களிடமிருந்தும் வேதியர் எதையும் ஏற்க மாட்டார். இவ்வாறு வேதியரைச் சரிகட்டும் குடும்பஸ்தினரின் வாழ்க்கை வீணாகி விடும்.

குறிப்பிட்ட சில வகையினரை நாம் விருந்தினர்களாக வரவேற்று உபசரிக்கக் கூடாது.

அத்தகையோரில் தீய நோக்கத்திற்காக அறுவை சிகிச்சை செய்பவர், பிரம்மச்சரியத்தை நடுவில் கைவிட்ட சமயக் கல்வி மாணவர், திருடன், கொடூரன், குடிகாரன், கருச்சிதைவு செய்பவன், வேத அறிவை விற்பனை பொருளாக்குபவர் ஆகியோர் அடங்குவர். இவர்களில் யாராவது நமக்கு வேண்டியவர்களாக இருந் தாலும் விருந்தினர்களை உபசரிக்கக் கூடாது.

உண்மையான துறவி கோபப்படமாட்டார். மண்ணையும், தங்கத்தையும் சமமாகவே மதிப்பர். எதற்கும் கவலைப்பட மாட்டார்கள், யார் மீதும்பற்று வைப்பதோ... யாரையும் வெறுப்பதோ கிடையாது. தன்னை யார் புகழ்ந்தாலும், இகழ்ந்தாலும் பாதிப் படைவதில்லை. பிரியமானவை பிரியமற்றவை என்று வேறுபடுத்திப்பார்க்கும் மனப்பான்மை அவசியம் இருப்பதில்லை. அவர் எந்நிலையிலும் சலனப்படாது அமைதியாக இருப்பர்.

உண்மையான துறவி யாருக்கும் சொந்தமில்லாதவர்.. காட்டில் விளையும் அரிசி, கிழங்குகள், மரக்கொட்டைகள், இலைகள் ஆகியவற்றை உண்டு உயிர்வாழ்வார். சுயக்கட்டுப்பாடு உள்ளவராக இருப்பார். அக்கினிக்கு பலியுணவைக் கொடுத்து வழிபடுவார். தனியிடத்தில் வசிப்பார். ஆனாலும் தன்னை சந்திப்பவர்களை நன்கு உபசரிப்பார்.

தொலைவில் உள்ள நல்லறிஞர் ஒருவருக்குக் கெடுதல் செய்து விட்டு, அவர்தான் தொலைவில் இருக்கிறாரே.... நம்மை ஒன்றும் செய்ய முடியாது என நினைக்க வேண்டாம். அறிஞர்கள் கைகள் நீண்டவை, ஆகவே அவர்கள் தமக்குத் தீங்கிழைத்தவர்கள் எங்கிருந்தாலும் தண்டித்து விடமுடியும்,

நம்மத் தகாதவரிடம் நாம் நம்பிக்கைவைக்கக் கூடாது. ஒருவர் நம்பத்தக்கவர் ஆனாலும் அவர் மீதும் அளவு கடந்து நம்பிக்கை வைக்கக் கூடாது. எதற்கும் மற்றவர்களையே நம்பினால் நாம் ஆதரவற்றோர் ஆகி பலகீனம் அடைவோம்.

யாரிடமும்நாம்பொறாமைகொள்ளக்கூடாது. நமது மனைவிக்கு துன்பம் நேராமல் காப்பாற்ற வேண்டும். நம்மைச் சார்ந்தவர்களுடனும், விருந்தினருடனும் உணவை, வசதிகளை பகிர்ந்து கொள்ள வேண்டும். இனிய சொற்களையே கூறவேண்டும். குறிப்பாக பெண்களிடம் கனிவாகப் பேச வேண்டும். ஆனால் அவர்களுக்கு மயங்கி அடிமை ஆகிவிடக்கூடாது.

சிறப்பான குணங்களுடன்நன்னடத்தையைக் கடைப்பிடித்து குடும்பத்திற்குப் புகழ் சேர்க் கும் பெண்கள் பூஜிக்கத்தக்கவர்கள். திரு மகளே அவர்கள் வடிவத்தில் அவதாரம் எடுத்து அக்குடும்பத்தில் வாழ்வதாகக் கருதப் படும். இத்தகைய தெய்வீகப் பெண்கள் சிறப் பாகப் பாதுகாக்கப்பட்டு...பராமரிக்கப்பட வேண்டியவர்கள்.

ஒருவன் குடும்பத்தின் தலைமையை எடுத்துக் கொண்டு விட்டால், வீட்டின் உள்நீர்வாகத்தை தந்தையிடமும், சமையலறைப் பொறுப்பைத் தாயிடமும், தனக்கு நிகரானவரிடம் பசுக்களின் பராமரிப்பயும் ஒப்படைக்க வேண்டும். விவசாய வேலைகளைத் தானே நேரில் கவனிக்க வேண்டும். வீட்டிற்கு வரும் விருந்தினரை தனது புதல்வர்களைக் கொண்டு உபசரிக்க வேண்டும்.

நீரிலிருந்து நெருப்புத் தோன்றியது. அந்தணர் குலத்திலிருந்து சத்திரியர்கள் தோன்றினர். கல்லிலிருந்து உலோகங்கள் எடுக்கப்பட்டன. இவ்வாறு தோன்றிய தீயின் சக்தி, சத்திரியரின்வலிமை, உலோகங்களின் ஆற்றல் எங்கும் செல்லுபடி ஆகக்கூடியவை. ஆனால், இவை தாங்கள் உதித்த இடத்தைப் பார்ப்பதில்லை.

நல்லவர்கள் நெருப்பைப் போலவே அளவற்ற சக்தி உடையவர்கள் ஆவர். ஆனால், வடிவெடுக்காமல் விறகுக்குள் அமைதியாகக் கிடக்கும் தீயைப் போல சான்றோர்கள் தங்களது ஆற்றலை வீணாக வெளியிடாமல் பொறுமையாய் இருப்பார்கள்.

# "ஆனால்" என்பது இறைவனது விதிகளில் வேலை செய்வதில்லை

47 பாகம்

பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

மனித வாழ்வு மேம்படுவதற்காக

பூஜ்ய குருதேவர் அருளுகிறார்: "வலிமையான மற்றும் ஆழ்ந்த ஒரு பிரார்த்தனை நிச்சயமாக ஆண்டவனின் விடையைப் பெறும். ஆனால் அவனிடம் பிரார்த்தனை செய்வதற்கு எந்த உண்மையான முயற்சியும் செய்யாவிடில், அதற்கேற்றார்போல் எந்த மறுமொழியையும் நீங்கள் உணரமாட்டீர்கள்.

ஒரு சமயத்தில் இல்லாவிடில் மற்றொரு சமயத்தில் ஒவ்வொருவரும் பிராத்தனை மூலம் ஏதாவதொரு விருப்பம் பூர்த்தியாகியுள்ளதைக் கண்டுள்ளனர். உங்கள் இச்சாசக்தி அதிக வலிமையாயிருக்கும்பொழுது அது தெய்வத் தந்தையைத் தொடுகிறது. தெய்வத் தந்தை உங்கள் விருப்பம் பூர்த்தியாக திருவுள்ளம் கொள்கிறான். அவன் திருவுள்ளம் கொள்ளும் போது அனைத்து இயற்கையும் ஒத்துழைக்கிறது. அவனிடம் ஆழ்ந்து, நம்பிக்கையுடனும் தீர்மானத்துடனும் பிரார்த்தனை செய்யும்போது இறைவன் மறுமொழி நிச்சயம் அளிக்கிறான். சில சமயம் உங்கள் விருப்பதினை அல்லது தேவையை நிறைவேற்றக்கூடிய மற்றொரு மனிதனின் மனதில் ஓர் எண்ணத்தை இடுவதன் மூலம் உங்களுக்குப் பதிலளிக்கிறான். அப்பொழுது அந்த நபர் விரும்பிய பலனை கொணர்வதற்கான இறைவனின் கருவியாகப் பயன்படுகிறான்.

எவ்வளவு அற்புதமாக இந்த மகத்தான சக்தி வேலை செய்கிறதென்று நீங்கள்உணர்வதில்லை, அது கணித ரீதியாக செயல்படுகிறது. "ஆனால்" என்பதற்கு அதில் இடமேயில்லை. இதைத்தான் விசுவாசம் என்று பொருள்படுத்திக் கூறியுள்ளது. அது பார்க்க முடியாத விஷயங்களைப்பற்றிய நிரூபணமாகும். இறைவனது இருப்பை உணர நீங்கள் பயிற்சி செய்தால் நான் கூறுவது உண்மையென்று உங்களுக்குத் தெரியும். இறைவனிடம் செல்லுங்கள். அவன் உங்களுக்கு தன் விதிகளின் செயல்முறைகளை காண்பித்து உங்களை வழிநடத்தும் வரை அவனிடம் பிரார்த்தனை செய்து கதறி அழுங்கள். மனதின் லட்சக்கணக்கான நியாய வாதங்களைவிட அமர்ந்து இறைவன்மேல் அகத்தே அமைதியை உணரும்வரை தியானம் செய்வது சாலச்சிறந்ததென்று நினைவில் கொள்ளுங்கள். பிறகு இறைவனிடம் கூறுங்கள்," நான் கணக்கிலடங்கா யோசனைகளை எண்ணினாலும், என்னால் இந்தப் பிரச்சனையை தனியாகத் தீர்க்க முடியாது. ஆனால் அதை நான் உன் திருக்கரங்களில் வைத்து, முதலில் உன் வழிகாட்டுதலை வேண்டி பின் அதன் தொடர்ச்சியாக ஒரு சாத்தியமான தீர்விற்கு பல கோணங்களில் சிந்திப்பதன் மூலம் என்னால் தீர்க்கமுடியும்". இறைவன் தனக்குத்தானே உதவி செய்துகொள்பவர்களுக்கு நிச்சயம் உதவி செய்கிறான். இறைவனிடம் பிரார்த்தனை செய்த பிறகு உங்கள் மனம் அமைதியாகவும் நம்பிக்கையினால் நிரப்பப்பட்டும் இருக்கும்போது, உங்களது பிரச்சனைக்கு பல விதமான விடைகளை உங்களால் காணமுடிகிறது;

உங்கள் மனம் அமைதியாக உள்ளதால் மிகச்சிறந்த தீர்வுகளை தேர்ந்தெடுக்க நீங்கள் வல்லமையுடையவர்களாகிறீர்கள். அந்தத்தீர்வை பின்பற்றுங்கள். நீங்கள் வெற்றியை சந்திப்பீர்கள். இது உங்கள் தினசரி வாழ்வில் மதத்தின் விஞ்ஞானத்தைப் பயன்படுத்துவதாகும்."



மனிதனின் அன்றாட வாழ்க்கையில் எதிர்பாராதவகையில் ஏதேதோ நடந்து கொண்டிருக்கின்றன. இதுவரை என்னென்ன நடந்தன; என்னென்ன நடக்கின்றன என்பவை மட்டும்தான் மனிதனுக்குத் தெரியும். ஆனால், என்னென்ன நடக்க உள்ளன என்பதை மனிதனால் அறிய இயலாது; கண்டுபிடிக்கவும் இயலாது. ஒரு குழந்தை தன் பெற்றோர்தான் தனக்கு அடைக்கலம் என்று எண்ணுகின்றது. எனவே அக்குழந்தை தன் பெற்றோரால் பாதுகாக்கப்படுகின்றது.

அதேசமயம் பெற்றோரிடமிருந்து அன்பும் அரவணைப்பும் குழந்தைக்கு கிடைக்கப் பெறுகின்றது. அதேபோன்று பிரபஞ்சத் தந்தை இறைவனின் குழந்தைகளாகின்ற நமக்கு அவனுடைய அரவணைப்பும் அன்பும் தேவைப்படுகின்றது.

அதற்கு என்ன செய்யவேண்டுமென்றால் பெற்றோரிடத்தில் குழந்தையென்பதுபோல் தாயும் தந்தையுமாகின்ற இறைவனிடத்தில் தூய்மையான அன்பைச் செலுத்தி அடைக்கலம் கொண்டால் அவன் நம்மை எப்படியும் பாதுகாத்துத்தான் ஆகவேண்டும் என்ற கட்டாயம் ஏற்படுகிறது. இறைவனிடத்தில் அடைக்கலமான ஒரு மனிதன் நன்கு பாதுகாக்கப்படுகின்றான். ஒரு கோழி தன் குஞ்சுகளை மற்ற பறவைகளிடமிருந்து பாதுகாப்பதுபோல் இறைவன் தன் குழந்தைகளாகின்ற நம்மைப் பாதுகாப்பான். நாம் எங்கு சென்றாலும் நம் அன்பிற்குரிய இறைவன், தன் அன்பான பார்வையை, கோழி தன் குஞ்சுகளிடம் வைப்பது போன்று தன் குழந்தைகளான நம்மிடத்தில் இறைவன் தன் அன்பான பார்வையை வைத்திருப்பான். இது உண்மை, இவ்வாறு இறைவனின் பார்வைக்குள் வாழும் எந்தக் குழந்தையும் பயமின்றி வாழலாம். " நீ என்ன செய்து கொண்டிருக்கின்றாய் என்பதன்று, நீ எங்கே இருக்கின்றாய் என்பதைத்தான் இறைவன் கவனிக்கிறான்" என்று குருதேவர் கூறியுள்ளார். அதுதான் உண்மை. இவ்வாறு ஆன்மாக்களை தன்னுடன் இணைத்துக் கொள்வதற்காக இறைவன் முழு மூச்சாகப் பாடுபடுகிறான் என்பதை இறைவனை அதீதமாக நேசிக்கின்ற தீவிரபக்தன் தெரிந்து கொள்வான். அதை இறைவனே பக்தனுக்குத் தெரிவிப்பதாகும். இறைவன் எல்லாவற்றையும் நமக்குத் தெரிவிப்பதால்தான் நாம் அனைத்தையும் அறிய முடிகிறது. பக்தன் எங்கு சென்றாலும் தன்னுடைய கேள்விக்கு இறைவன் பதிலளிப்பது மட்டுமின்றி அவனை பாதுகாக்கவும் செய்வான். இதற்கெல்லாம் காரணகர்த்தா யார் என்றால் இறைவனுடன் இணைந்துள்ள குருதான். உண்மையான, சரியான குரு கிடைத்தால் அதைவிட வேறு எதுவும் நமக்குத்தேவையில்லை. அதற்கான ஓர் உதாரணத்தை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

இறைவனுடன் இணைந்த ஓர் ஆத்மா (மகான்) குருவாகத் கிடைத்தால் உடலை விட்டுப்போன உயிரையும் மீட்டுத்தருவார். குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ் யோகானந்தரின் குரு, ஸ்ரீ யுக்தேஸ்வர் கிரி. அருவடைய குரு ஸ்ரீ லாஹிரிமகாசயர். இவர் தன்னுடைய சீடன் ராமன் என்பவரின் உடலை விட்டுப்போன உயிரை மீட்டுத்தந்துள்ளதை ஸ்ரீ யூக்தேஸ்வர் கிரி தன்னுடைய சீடரான பரமஹம்ஸ யோகானந்தருக்கு கூறியுள்ளார். அது, குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தரால் எழுதப்பட்ட 'ஒரு யோகியின் சுயசரிதம்' அத்யாயம் 32ல் கூறப்பட்டுள்ளது. அதை கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளேன்.

யுக்தேஸ்வர் கூறுகிறார்" என் நண்பர் ராமனும் நானும் இணைபிரியாத நண்பர்களாக இருந்தோம். அவன் மிக சங்கோசமுள்ளவனாகவும் தனிமையை நாடுபவனாகவும்



ஆன்மிகமலர் மெயில் புக்

1-15 டிசம்பர் 2018 17

www.aanmeegamalar.com

GET IT ON Google Play
கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, செல்போனிலேயே
நமது இதழ் முழுவதும் படிக்கலாம்.
ஆன்மிகமலர்.காம்

இருந்ததால் அவன் எங்கள் குரு லாஹிரி மகாசயரிடம் செல்ல, பகல் நேரச் சீடர்களின் கும்பல் இல்லாத நடுநிசிக்கும் விடியற்காலைக்கும் இடையிலுள்ள நேரங்களை மட்டுமே தேர்ந்தெடுத்தான். நான் ராமனுடைய மிக நெருங்கிய நண்பன் என்பதால் அவன் தன்னுடைய ஆன்மீக அனுபவங்களை என்னிடம் நம்பிக் கூறுவான். அவனுடைய சீரிய துணையினால் எனக்கு ஊக்கம் ஏற்பட்டதைக் கண்டேன். அவர் மேலும் தொடர்ந்தார். “ ராமன் திடீரென்று கடும் சோதனைக்குட்படுத்தப்பட்டான் அவன் ஆசிய காலராவினால் பீடிக்கப்பட்டான். கடுமையாக நோய்வாய்ப்படும் நேரங்களில் மருத்துவர்களை அழைப்பதை என்றுமே தடை செய்ததில்லை. ஆகையால் இரு சிறப்பு மருத்துவர்கள் அழைக்கப்பட்டனர்.

நோயால் அவதிப்படுபவனுக்கு சிகிச்சை செய்யும் அவசரத்தின் மத்தியிலும் நான் லாஹிரி மகாசயரிடம் உதவி வேண்டி ஆழ்ந்த பிரார்த்தனை செய்தவாறிருந்தேன். நான் அவருடைய வீட்டிற்கு ஓடி விம்மலுடன் அவரிடம் விஷயத்தைக் கூறினேன் ” மருத்துவர்கள் ராமனைப் பார்த்து வருகிறார்கள். அவன் குணமாகி விடுவான்”. என் குரு களிப்புடன் முறுவலித்தார். ” நான் நிம்மதியுடன் என் நண்பனின் படுக்கையருகில் சென்றபொழுது அவன் இறக்கும் தருவாயில் இருப்பதையே கண்டேன். ” அவனால் ஒன்று அல்லது இரண்டு மணி நேரங்களுக்குமேல் தாக்குப்பிடிக்க முடியாது” அந்த மருத்துவர்களில் ஒருவர் என்னிடம் மனமொடிந்த சாடையில் கூறினார். நான் மறுபடியும் லாஹிரி மகாசயரிடம் ஓடினேன். ”மருத்துவர்கள் மனச்சாட்சிக்கு உட்பட்டவர்கள். ராமன் குணமாகிவிடுவான் என்று எனக்கு நிச்சயமாகத் தெரியும்.” குருதேவர் மகிழ்ச்சியுடன் என்னைத் திருப்பி அனுப்பிவிட்டார். ராமனின் வீட்டில் இரு மருத்துவர்களும் சென்று விட்டிருந்ததை நான் கண்டேன். ஒருவர் எனக்காக ஒரு குறிப்பு விட்டுச் சென்றிருந்தார். ’ நாங்கள் எங்களால் முடிந்ததைச் செய்து விட்டோம். ஆனால் இவன் விஷயத்தில் நம்பிக்கை இல்லை’.

மேலும் அவர் தொடர்ந்தார்: “என் நண்பன் உண்மையிலேயே இறக்கும் மனிதனின் நிலையில் இருந்தான். லாஹிரி மகாசயரின் சொற்கள் எப்படிப் பலிக்காமலிருக்க முடியும் என்பது எனக்குப் புரியவில்லை. இருந்தாலும் ராமனின் உயிர் வேகமாக நழுவிக்கொண்டிருக்கும் காட்சியானது.’ இப்பொழுது எல்லாம் முடிந்து விட்டது’ என்ற எண்ணத்தையே. என் மனதில் ஏற்படுத்தியது. இம்மாதிரியாக நம்பிக்கையும் சந்தேகமும் என்ற மாறிமாறிவரும் அலைகளினால் தடுமாற்றத்துடனே என்னால் முடிந்த வரையில் என் நண்பனுக்குச் சிகிச்சை செய்தேன். அவன் பேசுவதற்காக எழுந்தான்.

“யுக்தேஸ்வர் குருதேவரிடம் ஓடிச்சென்று நான் இறந்துவிட்டதைக் கூறு. ஈமச்சடங்குகளுக்கு முன்னால் என் உடலை ஆசீர்வதிக்கும் படி குருதேவரிடம் சொல்” இச்சொற்களுடன் அவன் பெருமூச்சு வாங்கியவாறு பூத உடலை விட்டான்.”

“நான் ஒரு மணிநேரம் வரை அவன் படுக்கையருகில் அழுதவாறிருந்தேன். என்றுமே அமைதியை நாடும் அவன் இப்பொழுது மரணத் தின் நிரந்தர அமைதியை அடைந்துவிட் டிருந்தான். இன்னொரு சீடன் உள்ளே வந்தான், நான் திரும்பி வரும்வரை அவனை வீட்டிலிருக்கும்படி கூறினேன். அரை மயக்கத்துடன் நான் குரு தேவரிடம் சோர்வுற்றுத் திரும்பினேன்.

“இப்பொழுது ராமன் எப்படியிருக்கிறான்?” லாஹிரி மகாசயரின் முகம் புன்னகையில் மலர்ந் திருந்தது. ” ஐயா அவன் எப்படியிருக்கிறான் என்பதை நீங்கள் சீக்கிரமே பார்க்கப் போகிறீர்கள், நான் உணர்ச்சி வசப் பட்டு உளறினேன். இன்னும் சில மணி நேரங்களில் நீங்கள் அவன் உடலை, அது சுடுகாட்டிற்குக் கொண்டு செல்லப் படுவதற்கு முன் காண்பீர்கள். நான் மனமுடைந்து வெளிப்படையாகப் புலம்பலானேன்.

“யுக்தேஸ்வர், உன்னைக் கட்டுப்படுத்திக்கொள். அமைதியாக அமர்ந்து தியானம் செய்’ என்று கூறிவிட்டு லாஹிரி மகாசயர் சமாதியிலாழ்ந்து விட்டார். நான் என்னுள் சமாதானமடைவதற்கு முடியாமல் திணறிக் கொண்டிருந்தேன். விடியற்காலையில் லாஹிரி மகாசயர் ஆறுதல் கூறும் வகையில் என்னை நோக்கினார். ’நீ இன்னும் அமைதியற்று இருக்கிறாய் என்பதை நான் காண்கிறேன். ஏதாவது மருந்து வடிவத்தில் ராமனுக்கு நான் கண்கூடான உதவி செய்ய வேண்டுமென்று எதிர்பார்ப்பதாக நேற்றே நீ ஏன் விளக்கமாகக் கூறவில்லை?” குருதேவர் கிண்ண வடிவ விளக்கிலிருந்து சுத்திகரிக்கப்பெறாத விளக்கெண்ணெயைச் சுட்டிக்காட்டினார். ’ அந்த விளக்கிலிருந்து கொஞ்சம் எண்ணெயை ஒரு சிறு புட்டியில் நிரப்பிக் கொள், ராமனுடைய வாயில் ஏழு சொட்டுகள் ஊற்று” என்றார்.

“ஐயா, நான் மறுத்துக் கூறினேன். அவன் நேற்று மதியமே இறந்துவிட்டான். இந்த எண்ணையினால் இப்பொழுது என்ன பிரயோஜனம்?” “ பரவாயில்லை நான் சொல்வதுபோல் செய்’ என்றார். குருதேவரின் ஆனந்தமான மனநிலையை என்னால் புரிந்து கொள்ளவே முடியவில்லை.நான் தணிக்க முடியாத வேதனையில் தத்தளித்துக்கொண்டிருந்தேன். கொஞ்சம் எண்ணெயை எடுத்துக்கொண்டு ராமனின் வீட்டை நோக்கிச் சென்றேன். சாவின் பிடியில் சிக்கி விறைத்துக்கிடந்த ராமனின் வாயில் இறுகிப் போயிருந்த அவன் பற்களின் மேல் சொட்டுசொட்டாக அந்த எண்ணெயை விட்டேன். ஏழாவது சொட்டு அவனது உறைந்த உதடுகளைத் தொட்டதுதான்தாமதம். ராமனுக்கு உக்கிரமாகத் தூக்கிப் போட்டது. அவன் ஆச்சரியத்துடன் எழுந்து உட்கார்ந்தபோது தலையிலிருந்து கால்வரை அவன் தசைகளெல்லாம் அதிர்ந்தன. அந்த நேரம் லாஹிரி மகாசயரை ஓர் ஒளிப்பிழம்பில் நான் கண்டேன். அவர் என்னிடம், ” எழுந்திரு, உன் தூக்கத்தை விட்டொழி, யுக்தேஸ்வரருடன் என்னைக் காணவா” என்றார். இதை என் நண்பர் என்னிடம் கூறினார்.



இவ்வாறு இறந்த ராமனை உயிர்ப்பித்தார் ஸ்ரீ யுக்தேஸ்வரரின் குருதேவரான லாஹிரி மகாசயர். ” இவ்வாறு குருவிற்கு அடைக்கலமான ஒரு சீடனை தன் குருதேவர் மரணத்திலிருந்தும் காத்து ரட்சிப்பார் என்பது மேலே கூறப்பட்ட நிகழ்வு புலப்படுத்துகிறது. நாம் அனைவரும் நம் குருதேவரை ஏற்றுக்கொண்டு அவரை பின்பற்றுவதே முறையாகும்..

ஜெய் குரு

மீண்டும் மலரும்...

குருப்ரியா Cell No.9894595909



# ஜாதி, மதம், பணம் தேவையில்லை அன்பு, பக்தி மட்டுமே ஏற்கும் கடவுள்

# இடைச்சி கல் உண்மை

தஞ்சை பெரிய கோயில் கட்டி முடிக்க பட்டு குட முழுக்கு கும்பாபிஷேகத்துக்கு நாளும் குறிக்கப்பட்டு விட்ட நேரம் அது...

கோயில் எதிர்பார்த்தபடி நல்லபடி யாய் கட்டி முடிக்க பட்ட சந்தோசத்துல ராஜ ராஜ சோழன் நிம்மதியா தூங்கும் போது... கனவில் பரமசிவன் அவன் முன்னே எழுந்தருளினார்.

ராஜ ராஜ சோழன், “இறைவா என் பாக்கியம் என்னவென்று சொல்வது... தாங்கள் எனக்கு காட்சி தந்தது நான் செய்த பாக்கியம்...

தங்களுக்கு நான் கட்டிய கோயில் எப்படி இருக்கிறது?... இந்த ஊரிலே எல்லோரும் வியந்து பார்க்கும் மிக பெரிய கோயிலாக கட்டியுள்ளேன்...

அதற்க்கு ‘தஞ்சை பெரிய கோயில்’ என்று பெயர் சூட்ட போகிறேன்...” என்று கேட்டான் ஆனந்தமாக.

இறைவன் சிரித்து கொண்டே, “ம்ம்ம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்... ஒரு இடைச்சி மூதாட்டியின் காலடி நிழலின் கீழ் யாம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்...” என்று கூறி மறைந்தார்.

ராஜ ராஜனின் கனவும் கலைந்தது.

விழித்தெழுந்த ராஜராஜன் தான் கண்ட கனவை பற்றி மறுநாள் அரசவையில் கூறி அந்த கனவுக்கு விளக்கம் கேட்டான்.

யாருக்கும் பதில் தெரியவில்லை.

பின் நேராக கட்டி முடிக்க பட்ட தஞ்சை பெரிய கோயிலுக்கு சென்றான்.

கோயில் சிற்பியிடம் தான் கண்ட கனவை கூறி விளக்கம் கேட்டான்.

சிற்பி தயங்கியவாறே, “அரசே கடந்த மூன்று மாதங்களாக மோர் விற்கும் வயதான ஒரு ஏழை இடைச்சி மூதாட்டி தினமும் மத்திய வேளையில் இங்கு வருவார்...

ஏழ்மை நிலையில் இருந்தாலும் தன் பங்குக்கு இந்த கோயிலுக்கு ஏதாவது செய்யவேண்டும் என்று எண்ணி தான் விற்கும் மோரில் பாதியை காசுக்காகவும்,

பாதியை இந்த கோயிலுக்காக வேலை செய்யும் எங்களுக்கு குடிக்க இலவசமாக கொடுப்பார்...

நாங்கள் காசு கொடுத்தாலும் வாங்க மறுத்து விடுவார்.

எதோ இந்த ஏழை இடைச்சியால் இந்த கோயிலுக்கு செய்ய முடிந்த தொண்டு என்று கூறி காசு வாங்க மறுத்திடுவார்.

இப்படி இருக்கும் போது போன வாரத்தில் ஒரு நாள், ஆலய சிற்பங்களின் எல்லா வேலையும் முடித்த எங்களுக்கு இறைவனின் கருவறையின் மேலிருக்கும் கல்லை மட்டும் சரி செய்யவே முடியவில்லை...

நாங்களும் அதன் அளவை எவ்ளவோ முயற்சி செய்து அளவெடுத்து வைத்தாலும் ஒன்று கல் அளவு அதிகமாக இருந்தது அல்லது குறைவாக இருந்தது.

எங்கே ஆலய பணி நடக்காமல் போய்விடுமோ என்று நாங்கள் கவலையுடன் இருந்தோம்...

அப்பொழுது இந்த மோர் விற்கும் இடைச்சி மூதாட்டி வந்து மோர் கொடுத்து கொண்டே, ‘ஏன் கவலையாய் இருக்குறீர்கள்?’ என்று கேட்டார்கள்.

நாங்களும் கல் சரி ஆகாத விசயத்தை சொன்னோம்.

அதற்க்கு அவர்கள் என் வீட்டு வாசற்படியில் பெரிய கல் ஒன்று உள்ளது... நான் அதை தான் என் வீட்டுக்கு வாசற்படி போல் வைத்துள்ளேன்.

அதை வேண்டுமானால் எடுத்து பொருத்தி பாருங்கள் என்றார்.

நாங்களும் நம்பிக்கை இல்லாமல் அந்த இடைச்சி மூதாட்டி சொன்ன கல்லை எடுத்து வந்து பொருத்தினோம்...

என்ன ஆச்சிரியம்! கருவறையின் மேற் கூரைக்கு அளவெடுத்து வைத்தது போல் மிக சரியாக இருந்தது.

அதைதான் இறைவன் தாங்களுக்கு

“ஒரு இடைச்சி மூதாட்டியின் காலடி நிழலின் கீழ் யாம் மிகவும் ஆனந்தமாக இருக்கிறோம்”

உணர்த்தி இருப்பார் என்று அடியேன் நினைக்கிறேன்... என்றான் சிற்பி.

இதை கேட்டதும் ராஜ ராஜனுக்கு எல்லாம் புரிந்தது...

எவ்வளவு பொருள் செலவு செய்து கோயில் கட்டினாலும் இறைவன் நேசிப்பது அன்பான ஒரு ஏழையின் பக்தியை தான்.

ஆரவாரமாக பொருள் செலவு செய்து நான் கோயிலை கட்டினாலும், அமைதியாக ஏழ்மை நிலையிலும் அந்த இடைச்சி விற்க இருந்த மோரை கோயில் திருப்பணி செய்வோருக்கு அர்ப்பணித்தாரே...” என்று கண்ணீர் மல்கி...

பின் சுதாரித்து தன் அமைச்சரை அழைத்து, “அமைச்சரே கும்பாபிஷேகம் நடக்கும் நன்னாளில் அந்த இடையர்குல மூதாட்டியை அரண்மனைக்கு அழைத்து வாருங்கள்... நான் வெண்குடை ஏந்தி அந்த அம்மையாரை வைத்து கும்பாபிஷேகம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள்...

இந்த கோயில் கட்டியது அந்த மூதாட்டி இடைச்சி தான்... நான் அல்ல... இதற்கு இறைவனே சாட்சி என்றான்...

இன்றும் இந்த இடைச்சிக் கல் வரலாற்றில் மிக முக்கியமாக இடம்பெற்றுள்ளது.

இறைவன் பணத்திற்கோ, ஆடம்பரத்திற்கோ, ஆட்படுத்த முடியாது. உண்மையான அன்பும், பக்தியும் இருந்தால் மட்டுமே இறைவனை அடைய முடியும் என்பதை இந்த தஞ்சை கோவிலின் கட்டுமானத்தில் அனைவரும் அறியும்படி சிவ லீலை செய்துள்ளார்.

என்னதான் நாம் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்தாலும், இறைவனிடம் அன்பும் பக்தியும் இல்லையென்றால் எத்தனை கோயில்களுக்கு சென்று தவம் செய்தாலும், எத்தனை திருக் கோயில்களுக்கு பொன் பொருள் கொடுத்து விழாக்கள் நடத்தினாலும் பயன் ஒன்றுமில்லை.

இறைவன் கேட்பது ஒன்றுதான், அது கண்ணப்பனிடமிருந்த அன்பு, ஔவையிடமிருந்த பக்தி இதில் எதையாவது ஒன்றை நாம் பின்பற்றினாலே, இறைவன் நம்மை நாடி வருவான் என்பது உண்மை. இதைதான் நம் புராணங்களில் பல்வேறு வழிமுறைகளில் இறைவன் நமக்கு உணர்த்தியுள்ளான்.

– தொகுப்பு: ஸ்ரீ பதி, சென்னை.





aanmeegamalar.com
இணையதளத்தின்
mobile app
GET IT ON Google Play
அனைத்து செய்திகளும், இ-புத்தகத்தையும் இனி உங்கள் மொபைலில் படித்து மகிழலாம்.
கூகுல் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர்
Aanmeega malar (mobile app)
டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.
அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்




ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
செல்: 8825844033
•••
இணை ஆசிரியர்
முருகன் செல்: 7338881773
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
குருபிரியா செல்: 9894595909
மூ.சக்திவேல் செல்: 9787576858
புனிதவேல் செல்: 9841807572
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
செல்: 08825844033

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
08825844033

ஆசிரியர் குழுவில்
நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
08825844033



# கம்பீரா

பிம்பங்கள் பிரதிபலிக்கும் – அது கணக்கு. இப்போது நான் படித்திருக்கிறேனா, படிக்கவில்லையோ, பிரதிபலிப்போன். 166 வருடம் முன் 'ஏழுகிணறு' என்ற இடத்தில் 'இராமலிங்க சுவாமிகள் ' பிரதிபலித்தார். 'பிரதிபலிப்பு' என்பது கணக்கு. இந்தக் குறிப்புகள் எப்படி தெரிகின்றன? தோன்றுகின்றன?

தோன்றியவுடன் நம் கவனத்தை ஈர்ப்பது 'குறிப்பு'. மேஜையின் மேல் மூக்குக் கண்ணாடி கவனத்தை ஈர்க்கும். அதுபோல, 'சத்பாத்திரங்கள்' யார்? பகவானைப் பற்றி யாராவது சொன்னால், வாங்கி வைத்துக் கொள்வது அனைத்தையும்.

'பொம்மையைப் போடுங்கள்' ஆங்கிலத்தில் ட்ரா பண்ணி / பேப்பரில் போட்டால், அறுத்து விட்டது போல் இரண்டு கோடு.. அப்பால் / இப்பால் ஒரு பாகம். நடுவில் கோடு. அறுவை சிகிக்சையில் அறுக்கிறார்கள். அம்பாள் என்ன சொல்கிறாள்? சாக்பீஸ் கொடுத்து பூமியில் தரைவழியாக நேரே போக வேண்டும். நேர்கோடு நேராகப் போட்டால், எவ்வளவு நீளம். அதற்கு கம்பீரம் என்று பெயர். கம்பீரானந்தர்.



மத்யஸ்தானம் / பிந்து ஸ்தானம் பிடித்து புள்ளி வை. பெரிய கோட்டை , காம்பஸ் வைத்து வரைந்தால், வட்டம் ஏற்படும். பூமியை சக்கரத்தில் தான் பார்க்க முடியும். சக்கரம் இல்லாமல் ஒன்றும் கிடையாது. பூமியைப் பார்க்க வேண்டும் என்றால் மூன்று வேண்டும்.

வட்டம் (சர்க்கிள்). அதன் கம்பிரத்தை வைத்து பாதியை, மீதி பாதியை அளக்கலாம். மேசை4 2.1/4 அடி நீளம், 1.3/4 அகலம் – நீண்ட சதுரம். எவ்வளவு வேணும்? மஞ்சள் மரத்தில் போடலாமா? தேக்கு மரத்தில் போடலாமா? ரோஸ் வுட் ஆ? இவை விவரங்கள்.

நேர்க்கோடு . சமஸ்கிருதத்தில் கம்பீரம் ஏன்? இது வட்டத்தை எளிதாகப் பிரிக்கும்; பிரிக்கலாம். இதை நேராகப் போட்டால் 'தீரம்'. ஒரு கணக்கு. ஸ்ரீசக்கரத்தில் இருக்கிறது. இரண்டும் போட்டால் கோணம் வரும். ஒரு கோடு – மத்தியில் கோடு. 'கோட் ஸ்டேன்டு' மாதிரி – சட்டம் ஒரு டிசைன்.

இதனுடைய கம்பீரம் தெரிந்து கொள்ளுங்கள். எவ்வளவு இடத்தை அளந்து, சாய்வாக கோடு சேர்த்தால் செங்கோணம், ஸ்லான்ட்டிங் ஆக போடு! 'சாய்வு' என்பது கணக்கு. கீழே நேர்கோடு இல்லாவிட்டால் கூட, உலகில் கோணம் உண்டாகிவிடும் என்று அர்த்தம். சாய்வு ஆக இரண்டு கோடு போட்டு இணைத்தால், செங்கோண முக்கோணம்.

ஆறு கால பூஜை – அறு கோண முக்கோணங்கள். ஒளஷட் – 96. ஷட் – 6. த்ரிஷட் – 36, பஞ்சாஷட் – 56. இத்தனை கோணங்கள் , விதவிதமான கோணங்கள். சின்ன பல் மாதிரி இருக்கும்: இரும்பு பல் சக்கரம் செய்தீர்கள். டிசைன் போட்டு, வேறு ஏதாவது பொறுத்தியில் வைத்து, விசையை வைத்துக் சுற்றினால், குறிப்பிட்ட வட்டத்தில் நெருப்பினை வெளிக்கொண்டு வருகிறது.

10–10–2010 – ஞாயிறு – நவராத்திரி சொற்பொழிவிலிருந்து
தொகுத்தது: பாலச்சந்தர்

# ஞானியின் சிந்தனைகள்

ஒரு முட்டாளின் படத்தை வரை என்றார் ஆசிரியர். மாணவன் தனது படத்தையே வரைந்து அதை ஆசிரியரிடம் காட்டினான். தான் ஒரு முட்டாளில்லை என்பதாக எண்ணிக் கொண்டிருந்த ஆசிரியர் தனது படத்தை வரைய முடியாமல் கஷ்டப்பட்டார். இதுவே ஆணவம் எனப்படும்.

•••

முடிந்தால் நல்ல சிந்தனைகளையும், குளிர்ச்சியான நினைவுகளையும், புத்தனையும் அல்லது இனிமையானவர்களையும், நல்லவர்களையும் தலையிலே வை. அவைகளோ, அவர்களோ உனது உள்ளத்திற்குள் ஓடி வந்துவிடுவார்கள்.

•••

ஆணியை சுத்தி அடிக்கிறது. சுத்திக்கும் ஆணிக்கும் விரோதமா? இல்லை. அதுபோல் உனக்கு புத்திமதி சொல்லுகின்ற புத்தன், உனக்கு நண்பனே என்று எண்ணு.

•••

கடவுளை நம்பி பக்தி செய்து கொண்டு நாம் ஒவ்வொரு செயல்களையும் செய்து கொண்டே வந்தால் நமது செயல்களில் தவறு நடப்பதே இல்லை.

•••

கோவிலுக்குள் கல்லால் கடவுளிருந்தது என்று சொன்னால் நீ பண்டிதன். கல்லிலே கடவுள் இருக்கிறான் என்று சொன்னால் அது நம்பிக்கை. எல்லாம் கடவுள் மயம் என்றால் அது ஞானம்.

•••

ஞானச்சேரி ஞானிகள்
பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின் அருளுரையிலிருந்து தொகுத்தது
மேலும் விபரங்களுக்கு
எஸ்.மகாதேவன், போன் 098410 28028


ஆன்மிகமலர் மெயில் புக்

# விலை மதிப்புமிக்க நவரத்தின மாலை



ஒரு முறை, தஞ்சாவூரில் கடுமையான வறட்சி ஏற்பட, மகான் ஸ்ரீராகவேந்திரரின் அருளை வேண்டி நின்றார் தஞ்சை மன்னர். தனக்கு சந்நியாசம் தந்த நகரமான தஞ்சையில் எழுந்தருளினார் ஸ்ரீராகவேந்திரர்.

மகானின் திருப்பாதங்கள் பட்டதுமே மண்ணும் வளமாகும்; அவர் விரும்பினால் இயற்கையும் வளைந்து கொடுக்கும் என்பதற்குச் சான்றாக... மழை பொத்துக்கொண்டு ஊற்றியது, வறண்டிருந்த மண் வளமானது. பஞ்சம் நீங்கிட ஸ்ரீராகவேந்திரர் செய்த யாகத்தால், காய்ந்து கிடந்த உணவுக் கிடங்கும் நிரம்பத் தொடங்கியது.

மழை தருவித்து, மக்களைக் காத்த மகானுக்கு சிறப்பான பரிசு தர விரும்பினான், தஞ்சை மன்னன். குரு ஸ்ரீராகவேந்திரரின் பாதம் பணிந்து வணங்கி, விலை உயர்ந்த நவரத்தின மாலை ஒன்றைச் சமர்ப்பித்தான். மகான்கள் பொன்னுக்கும் பொருளுக்கும் என்றுமே மதிப்பளிப்பதில்லை அல்லவா? மகான் ஸ்ரீராகவேந்திரரும் அந்த மாலையை, தனக்கு முன்பிருந்த அக்னி குண்டத்தில் சேர்த்தார்.

இதனைக் கண்டு பதறிய மன்னன், "குருவே, அது விலை மதிப்புமிக்க நவரத்தின மாலை... அதனை இப்படி அக்னியில் போட்டுவிட்டீரே" என்று கேட்டான். புன்னகைத்த மகான், அக்னி பகவானை வேண்டினார். நவரத்தின மாலை தீயிலிருந்து புதுப் பொலிவுடன் மீண்டும் அவர் கைகளுக்கு வந்தது.

"இந்தா வைத்துக்கொள்" என குரு ஸ்ரீராகவேந்திரர், மாலையினை மன்னனிடம் அளித்தார். தனது தவறை உணர்ந்த மன்னன் குருவின் பாதங்களில் விழுந்து வணங்கி, தன் அறியாமையை மன்னிக்கும்படி வேண்டினான். மன்னிப்புக் கேட்பவர்களை மன்னிப்பது தான், மகான்களின் இயல்பு அல்லவா? மகான் ஸ்ரீராகவேந்திரரும் மன்னனை மன்னித்தார். அந்த நவரத்ன மாலையினை, மூலராமருக்கு அணிவித்து பூஜைகளைத் தொடர்ந்தாராம்.

முருகப் பெருமானுக்காகக் கட்டப்பட்ட முதல் திருக்கோவில் புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள ஒற்றைக் கண்ணூர்த் திருக்கோவில் ஆகும். முதலாம் ஆதித்த சோழன் இதனைக் கட்டினான். இந்தக்கோவிலில் முருகனுக்கு யானை வாகனமாக உள்ளது. ஒரு திருக்கரத்தில் ஜபமாலையும், மறுகையில் சின்முத்திரையும் கூடிய நிலையில் இங்கே அருள் பாலிக்கிறார்.

பல்லவ மன்னர்கள் முருகனைப் பரம பாகவதன், பரம மகேஸ்வரன், பரம வைஷ்ணவன், பரம பிரம்மண்யன் என்று அழைத்தார்கள் என செப்பேடுகள் கூறுகின்றன.

முருகனை ஒரு முறையே வலம் வருதல் வேண்டும். என கூறப் படுகிறது.

முருகப் பெருமானுக்கு உகந்த மலர்கள் முல்லை, சாமந்தி, ரோஜா, காந்தன் முதலியவை ஆகும்.



எத்தனை துன்பம் எதிர் கொண்டு வந்தாலும் சரவணப் பொய்கையில் நீராடிய நொடிப் பொழுதிலேயே துன்பங்கள் எல்லாம் தொலைந்து போகும் என்று முருகன் கோயிலின் திருக்குளம் குறித்துத் தணிகையாற்றுப் படை கூறுகின்றது.


மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும் "ஆன்மிகமலர் மெயில் புத்தகம்" பெற உங்கள் இமெயில் முகவரியை கீழ்காணும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

whats-app no: 7299992699

aanmeegamalar@gmail.com

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின் அனைத்து புத்தகங்களையும் படித்து மகிழவும் டவுன்லோடு செய்யவும்

aanmeegamalar.com

MAGZTER DIGITAL MAGAZINE STORE TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com இணையதளத்தின் செய்திகளை

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன் தெரிந்து கொள்ளலாம்.

# நாக தோஷம்





நாக தோஷத்தை உருவாக்குபவர்களில் முதன்மை பெற்றவர்கள் ராகு கேது பகவான்கள். சப்த ரிஷிகளில் ஒருவரான மரீஷி மகரிஷியின் மகன் காசிப முனிவர்.

அவர்தம் பேரனாக அசுர வம்சத்தில் அவதரித்தவர் சுவர்பானு இவர் சகல கலைகளையும் கற்று வளர்ந்தார்.

இந்நிலையில் தேவர்களும்அசுரர்களும் சாகாவரம் தரும் அமிர்தத்திற்காக ஒன்றிணைந்து பாற்கடலைக் கடைந்து அமிர்தம் பெற்றனர்.

தீய எண்ணம் கொண்ட அசுரர்களை அமுதம் உண்ணாமல் செய்வதற்காக திருமால் மோகினி அவதாரம் எடுத்து அசுரர்களைத் தனது அழகினால் மயக்கி, தமக்கு கட்டுப்படச் செய்தார்.

அமரர் ஒரு பந்தியிலும், அசுரர் ஒரு பந்தியிலும் அமரச் செய்து, அமுதத்தை தேவர்கள் மட்டும் அருந்துமாறு பரிமாறிக் கொண்டே வரும் போது, அமிர்தம் தீரும் தருவாயில் அதை சுவர்பானு கவனித்து அசுரர் பந்தியிலிருந்து எழுந்து சென்று தேவர்களுக்கிடையே அமர்ந்து அமுதத்தையும் உண்டு விட்டான்.

இதனை கவனித்து சூரிய சந்திரர்கள் திருமாலிடம் சைகையால் தெரிவிக்க, மோகினித்திருமால் அவனது தலையைத் துண்டித்து விட்டார். ஆனால் அமுதம் உண்டபடியால் அழியாத்தன்மை பெற்ற சுவர்பானு, தலை வேறு உடல் வேறாகக் கிடந்தான். திகைப்புற்ற தேவர்கள் பிரம்ம தேவரை வேண்ட, அவர் சுவர்பானுவின் தலைக்கு நாகத்தின் உடலையும், தனித்துக் கிடந்த உடலில் நாகத்தின் தலையையும் பொருத்தினார்.

மனித தலையும் நாக உடலும் அமைந்த உருவத்திற்கு ராகு என்ற பெயரும்,

மனித உடல் நாக தலையும் அமைந்த உருவத்திற்கு கேது என்ற பெயரும் கொடுத்து, வேதங்களைக் கற்றறியச் செய்து ஞானம் பெறச் செய்தார். அவர்களை கிரக மண்டலத்தில் பங்கு பெறச் செய்தார். நவகிரக பரிபாலனத்தில் அப்பிரதட்சணமாக (வலமிருந்து இடமாக) சுற்றி வரும்படி பணித்தார்.

அவர்களின் வேண்டுகோளின்படி ராகுபகவானை போகயோக காரகத்துவம் கொண்டவராகவும், கேது பகவானை ஞானமோட்ச காரகத்துவம் கொண்டவராகவும் வரமளித்து நவகிரக பரிபாலனத்தில் இணைத்தார். ஒருவரான இருவர் இன்பமாய் கடமையாற்றி வருகின்றனர். இத்தகைய ராகுகேது பகவான்கள் உருவாக்கும் தோஷமே நாகதோஷமாகும்.

லக்னத்தில் ராகு இருப்பது நாக தோஷம்.

மேஷம், ரிஷபம், கடகம், சிம்மம், கன்னி இவற்றில் ஒன்று லக்னமாக இருந்து அதில் ராகு சுபர் பார்வையுடன் இருந்தால் நீண்ட ஆயுள், வசதியான வாழ்க்கை அமையும்.

சுபர் பார்வை இல்லை எனில் புத்ர பாக்யத்தடை, உடல் நலக்குறைவு, வேதனையுடன் கூடிய வாழ்க்கை அமையும்

லக்னத்தில் கேது இருப்பது நாக தோஷமாகும். இருப்பினும் துலாம், விருச்சிகம், மகரம், கும்பம், மீனம் ஆகிய ஒன்று லக்னமாக இருந்து அதில் சுபர் பார்வையுடன் கேது இருந்தால் நீண்ட ஆயுளுடன் கூடிய வசதி நிறைந்த வாழ்க்கை அமையும். சுபர் பார்வை இல்லை எனில் புத்ர பாக்யத்தடை, உடல் நலக்குறைவு, வேதனையுடன் கூடிய வாழ்க்கை அமையும்.

லக்னம், 2–ம் இடம், 4–ம் இடம், 5–ம் இடம், 7–ம் இடம் இவ்விடங்களில் ராகு கேது அமைவது நாக தோஷமாகும். இதனால் திருமணத்தடையும், குழந்தை பாக்கியம் இல்லாமல் இருப்பதும், வறுமையும், குடும்பத்தில் குழப்பமும் ஏற்படும்.

5–ல் ராகு எனில் பூர்வ புண்ய இல்லாதவன், நாக தோஷம். ஆனால் சூரியன் பார்த்திருக்க தீர்க்காயுள், தனம், யோகம். வெளிநாட்டு வாழ்க்கை. பொன் பொருள் வீடு கிடைக்கும்.

5–ல் உள்ள ராகுவை சுபர் பார்வை செய்ய, 5–ம் அதிபதி





யோகம் முன்னேற்றம் ஏற்படும்.

குரு நோக்கின் தோஷம் தீரும். நற்பலன் கிடைக்கும்.

நாக தோஷப்பரிகாரமாக ஜாதகரின் மனைவி அரச மரத்தை 12 முறையாவது சுற்றி வந்து, கன்னி பெண்களுக்கு மங்கள ஸ்நானம் செய்துவிட்டு, பழம் பாக்கு வெற்றிலை தட்சணையுடன் மனம் குளிரச் செய்தால் தோஷம் தீரும். ஆயுள் தீர்க்கமுள்ள புத்திரம் கிட்டும்.

ஜாதகத்தில் ராகு அல்லது கேது தசை அல்லது அவரது புத்தி நடந்தால் புற்று கோயில்களில் பாலூற்றி வழிபாடு செய்யலாம். மேலும் மேற்பட்ட கிரகங்களின் மந்திரங்களை ஜெபித்து வழிபாடு செய்து வருதல் நல்வாழ்வு வாழ வழி வகுக்கும்.

### ஸ்ரீராகு பகவான் வழிபாடு மந்திரம்

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவாதருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

### ஸ்ரீகேது பகவான் மந்திரம்

கேதுத் திருவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாபம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத் திருவே கேண்மையாய் ரக்ஷி.

வலுத்தால் நாகதோஷம் உண்டாவதில்லை.

5–ல் உள்ள கேதுவால் புத்ர நாசம் அல்லது கருச்சிதைவு ஏற்படும். ஆனால் ஜாதகருக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது முதல் நல்ல


# ஆன்மிகமலர் டிரஸ்ட்

Tamilnadu Government Redg.304/2016

எங்கள் பணிக்கு உங்களால் முடிந்த உதவிகளை செய்யலாம்.

AANMEEGA MALAR TRUST
ACCOUNT NO. 310601011001269
IFSC CODE:VIJB0003106 MICR CODE: 600029043
VIJAYA BANK (KODAMBAKKAM BRANCH)

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.

மேலும் தொடர்பு கொள்ளவும் 8825844033






## சிவபுராணம் சுட்டிக்காட்டும்

# மனித இறப்பிற்கான அறிகுறிகள்

இவ்வுலகில் பிறப்பு என்ற ஒன்று இருந்தால், இறப்பு என்ற ஒன்று நிச்சயம் இருக்கும். பிறப்பை கண்டு மகிழும் நாம், இறப்பைப் கண்டு அச்சமடைவோம். சாதிக்கும் யாருக்கும் இறக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்காது. இருப்பினும், நிச்சயம் ஒரு கட்டத்தில் அனைவரும் இறக்க நேரிடும். அதை யாராலும் தடுக்க முடியாது. அந்த வகையில் ஒரு மனிதன் இறக்கும் நிலையை அவனே அறிந்து கொள்ள வேண்டும் என்பதால், மனித இறப்பு சம்பவத்தின் போது நிகழக்கூடிய அறிகுறிகளை சிவபுராணத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

### அறிகுறி 1

எப்போது ஒருவரது சருமத்தின் நிறமானது வெளிர் மஞ்சளாகவோ அல்லது வெள்ளையாகவோ அல்லது லேசான சிவப்பாக மாற ஆரம்பித்தால், அது அவர் இன்னும் 6 மாத காலத்தில் உயிரை விடப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 2

எப்போது ஒருவனால் அவனது பிம்பத்தை எதிரொலியை தண்ணீரிலோ அல்லது கண்ணாடியிலோ தெளிவாக காண முடியவில்லையோ, அத்தகையவர்களும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறார் என்பதை வெளிப்படுத்துமாம்.

### அறிகுறி 3

எப்பொழுது ஒருவனுக்கு பார்க்கும் அனைத்தும் கருப்பாக தெரிய ஆரம்பிக்கிறதோ, அவர்களும் இறப்பை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 4

ஒருவரது இடது கை மட்டும் ஒரு வாரத்திற்கு மேல் துடிக்கவோ அல்லது நடுங்க ஆரம்பிக்கிறதோ, அவர்கள் ஒரு மாதத்திற்கு மேல் உயிருடன் இருக்கப் போவதில்லை என்று அர்த்தமாம்.

### அறிகுறி 5

ஒருவரின் உணர்ச்சிமிக்க உறுப்புக்கள் இறுக்கமடைந்து கல் போன்று மாறுகிறதோ, அவர்களும் இன்னும் கொஞ்ச மாதத்தில் இறக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 6

நிலா, சூரியன் அல்லது நெருப்பின் ஒளியை சரியாக காணமுடியவில்லையோ, அத்தகையவர்களும் விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 7

எப்போது ஒருவரின் நாக்கு வீக்கமடைந்து, ஈறுகளில் சீழ் கட்ட ஆரம்பிக்கிறதோ, அவர்கள் இவ்வுலகில் நீண்ட நாட்கள் வாழப் போவதில்லை என்று அர்த்தம்.

### அறிகுறி 8

ஒருவரால் வானத்தில் உள்ள போல் நட்சத்திரங்களை காண முடியவில்லையோ, அவரும் ஆறு மாதத்தில் இறக்கப் போகிறார் என்று அர்த்தம்.

### அறிகுறி 9

சூரியன், நிலா மற்றும் வானத்தை பார்க்கும் போது, அவை சிவப்பாக தெரிய ஆரம்பித்தால், அத்தகையவர்களும் விரைவில் மரணத்தை சந்திக்கப் போகிறார் என்று அர்த்தமாம்.

### அறிகுறி 10

ஒருவரின் கனவில் ஆந்தையோ, வெற்றிடமோ அல்லது கிராமம் அழிவது போன்றோ வந்தால், அவரும் மரணத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறார் என்று அர்த்தமாகும்.





# சிறுநீரக பிரச்சனை தீர்க்கும் பஞ்சநத நடராஜர்

திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலையில் திருச்சியை அடுத்து பாடாலூரில் இருந்து சுமார் 4 கி.மீ தொலைவில் உள்ள திருஊற்றத்தூர் (ஊட்டத் தூர்) என்ற தலத்தில்......

ஆசியாவிலேயே மிகவும் அரிதான, பஞ்சநத கல்லில் செய்யப்பட்ட அபூர்வ நடராஜ பெருமான் திரு மேனி உள்ளது.

பஞ்சநத கற்கள் சூரியனில் இருந்து வெளிவரும் ஆரோக்கிய கதிர்வீச்சினை சேமித்து வைத்துக் கொள்ளும் ஆற்றல் உடையன. இந்த வகை கற்சிலை தற்போது எங்குமே கிடையாது.

ஆலிங்க நடனம், பஞ்சநதனம், சிங்க நதனம், யானை நதனம், யாழி நதனம் என்று 5 வகையான சிலாக்கற்கள் உள்ளன. இதில் பஞ்சநதனம் என்ற பாறை தெய்வீக ஒளி வீசும் என்பது சிற்பக்கலை வல்லுநரால் கூறப்பட்டுள்ளது.

சூரிய பிரகாசத்தை தருகின்ற இந்த பஞ் சநதன பாறைகளால் இவ்வூர் நடராஜர் சிலை வடிவமைக்கப்பட்டு உள்ளது.

இறைவி சிவகாம சுந்தரியின் உருவ அமைப்பு வணங்குவதற்கு மட்டுமில்லாமல் ரசனைக்குரிய தாகவும் இருப்பது தனிச்சிறப்பாகும். அன்னை தன் முகத்தை சாய்த்து பஞ்சநதன நடராஜரை பார்ப்பது போல் காட்சியளிப்பது அழகு!

சிறுநீரகம், மற்றும் சிறுநீரக கல் தொடர்பான நோய்களுக்கு இந்த நடராஜர் மருந்தாக திகழ் கிறார்.

சுமார் ஒரு கிலோ வெட்டி வேரினை 48 துண்டுகளாக எடுத்துக் கொண்டு அவற்றை ஒரு மாலையாக கட்டி இந்த நடராஜருக்கு சாற்றி அர்ச்சித்து பின்னர் அந்த 48 துண்டுகளை நாளொன்றுக்கு ஒன்று என்ற விகிதத்தில் ஒரு கோப்பை நீரில்... இரவு ஊற வைத்து, அதிகாலையில் வெறும் வயிற்றில் உட்கொள்ள நோய் தீர்வது இன்றும் நடைபெறும் அதிசயமாக உள்ளது!




அழகிய வடிவமைப்பில்
வார இதழ்கள்,
மாத இதழ்கள்,
பப்ளிகேஷன்ஸ்
புக் ஓர்க்,
அட்டைப்பட
வடிவமைப்பு,
நாளிதழ்கள்,
போன்றவை
தரமாகவும்
குறைந்த செலவில்
செய்துதரப்படும்
Bhaanrajg Graphics
செல்: +91-8825844033

# அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு பிண்டத்தில் உள்ளது அண்டத்தில் உண்டு

அழுகுணி சித்தர் என்று ஒருவர் இருக்கிறார். இவர் எல்லா சித்தர்கள் போலவே யோக கலையிலும், மருத்துவத்திலும் மஹா நிபுணர். ஆனால், தான் கூறுகின்ற எல்லா விஷயத்தையும் ஒப்பாரி வைத்து அழுவது போன்ற எழுத்து நடையில் பாடுவார். அதனால், தான் அவருக்கு அழுகுணி சித்தர் என்ற பெயர் வந்தது. மற்றபடி அவருடைய நிஜப் பெயர் யாருக்கும் தெரியாது. அவர் ஒரு அருமையான விஷயத்தை கூறுகிறார். மூல நெருப்பு என்ற ராஜகுமாரன், நாடிகள் என்ற ராஜபாட்டையில் பயணம் செய்கிறான் என்று. இதை பார்க்கும் போது ஓரளவு சித்த வைத்தியம் தெரிந்தவர்களுக்கே மலைப்பு வரும்.

மலைப்பதற்கான காரணங்கள் இல்லாமல் இல்லை. நமது உடம்பின் உள்ளே எலும்புகள் இருக்கிறது. இரத்த ஓட்டத்தையும், பிராண வாயுவையும் கொண்டு செல்லும் நுண்ணிய நாளங்கள் இருக்கின்றது. கண்களுக்கே தெரியாத துடிப்பு என்ற எழுபத்திரண்டாயிரம் வகை நாடிகள் இருக்கிறது. இந்த நாடிகள் எவற்றிற்கும் இது தான், இப்படித் தான் என்று அடையாளப் படுத்திக் காட்டும் உருவங்கள் கிடையாது. அப்படி இருக்க, மூல நெருப்பு என்ற குண்டலினி சக்தி எப்படி நாடிகள் வழியாக பயணப்படுமென்று சந்தேகம் தோன்றும். குண்டலினி சக்தி என்பதும், உருவமே இல்லாத மின்சாரத்தை போன்ற ஒருவித அதிர்வு தான். இந்த அதிர்வு, தான் தோன்றிய இடத்திலிருந்து செல்ல வேண்டிய இடத்திற்கு அதாவது பிரம்மா கபாலத்திற்கு செல்லும் வழியில் ஏற்பட்டிருக்கும் இடைஞ்சல்களை நீக்கி வழியை சுத்தப்படுத்துவது மட்டும் தான் நாடிகளின் முக்கிய பணியாகும்.

காரணம் குண்டலினி சக்தி எழுந்து மேலே வருவதற்கு மிக அதிகமான பிராண சக்தி தேவை. அந்த பிராண சக்தியை மூச்சு பயிற்சி வழியாக நாடிகள் பெற்று, உடம்பில் தக்க வைக்கிறது. இதனால் தான் பிராணயாமம் என்ற மூச்சுப் பயிற்சிக்கு நாடி சுத்தி என்ற பெயர் வைக்கப்படுகிறது. இந்த நாடிகள் பிற சக்தியாலும், அன்பு, பண்பு, தியானம் மற்றும் தவம் என்ற காரண சுத்திகளாலும், பரிபாலனம் செய்யப்படுகிறது. இடைகலை நாடி, சந்திரனின் தன்மை கொண்ட குளிர்ச்சியையும், பிங்கலை சூரிய தன்மை கொண்ட வெப்பத்தையும் உடம்பில் உருவாக்குகிறது. சுழுமுனை நாடி, அக்னி வடிவமாக இருப்பதனால், சூரிய சந்திர கலைகளை தேவைக்கு ஏற்றவாறு உடம்பிற்கு தருகிறது. இதனால் தான், கைதேர்ந்த வைத்தியர்கள் நாடிகளை பார்த்தே நோய்களை கண்டறிந்து விடுகிறார்கள்.

ஒருவர் உடம்பில் இடகலை நாடி அன்னம் போன்றும், கோழி போன்றும் நடைபோடுமாம். பிங்கலை நாடி ஆமை மற்றும் அட்டைப் பூச்சி போல நடக்கும். சுழுமுனை நாடி சமயத்திற்கு ஏற்றவாறு தவளையாகவும் பாம்பாகவும் உடம்பிற்குள் இயங்கும். இந்த நாடிகளின் இயக்கத்தை மையமாகக் கொண்டு மனித உடம்பில் வாதம், பித்தம் சிலேத்துமம் போன்ற தத்துவங்கள் செயல்புரிவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது. திங்கள் மற்றும் புதன் கிழமையில் மனித உடம்பில் வாதத்தின் தன்மை அதாவது வாய்வு தன்மை அதிகமாக இருக்கும். செவ்வாய் கிழமை பித்தத்தின் தன்மை அதாவது அக்னியின் தன்மை அதிகமாக இருக்கும். வியாழன் கிழமை கபத்தின் தன்மை அதிகமாக இருக்கும்.

பொதுவாக தினசரி காலையில் வாதமும்,





நடுப்பகலில் பித்தமும், மாலையில் கபமும் உடம்பில் அதிகரிக்கும். அதே போல சித்திரை, வைகாசி மாதங்களில் வாத நாடி அதிகமாக அடிக்கும். ஆணி, ஆடி, ஐப்பசி மற்றும் கார்த்திகை ஆகிய மாதங்களில் பித்த நாடியும், மார்கழி, தை, மாசி ஆகிய மாதங்களில் கப நாடியும் அதிகமாக வேலை செய்யும். வாத நாடி துடிக்கும் நேரம் ஒரு மாத்திரை பித்த நாடி துடிக்கும் நேரம் அரை மாத்திரை கபநாடி கால்மாத்திரை என்ற கால அளவில் நாடிகள் இயங்குகிறது. வாதநாடி நிமிடத்திற்கு பதினாறு என்ற முறையில் ஓடினால், மனிதனுக்கு நூற்றி இருபது வயதும், பித்த நாடி பனிரெண்டு என்ற கணக்கில் ஓடினால் நூறு வயது என்றும், கபநாடி இரண்டு என்று ஓடினால் என்பது வயதும் கணக்கு போடுகிறார்கள்.




வாதநாடி அபான வாயுடனும், பித்தநாடி பிராண வாயுவுடனும், கபநாடி சமானன் என்ற வாயுடனும் இயங்கி நிற்கும். அப்படி இயங்கினால் முப்பத்தொன்பது வயது வரை வாத நாடியும், அதன் பிறகும் அறுபத்தி மூன்று வயது வரை பித்த நாடியும் கடைசி கட்டத்தில் வாதநாடியும் வேலை செய்யும் என்கிறார்கள். இவைகளை எல்லாம் வைத்து கணக்கு போட்டு தான், மனிதனுடைய உடல் நலத்திற்கும், மன நலத்திற்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது எனவே நாடிகளின் இயக்கத்தை அலட்சிய படுத்தாமல் பராமரிக்க வேண்டுமென்று சித்தர்கள் சொல்கிறார்கள்.

குண்டலினி சக்தி இப்படி உடம்பின் அனைத்து பாகங்களுக்கும் தனது சக்திகளை கொடுத்து உடம்பில் உள்ள எல்லா இயக்கங்களையும், உணர்வுகளையும் இன்ப, துன்பங்களையும் கோப, தாபங்களையும் நிர்வாகம் செய்து உடம்பில் உஷ்ணம், குளிர்ச்சி ஆகியவற்றையும் சீராக பாதுகாத்து வருகிறது. இதுமட்டுமல்ல, உடம்பில் உள்ள ஆயிரக்கணக்கான நாடிகளையும், குண்டலினி சக்தியே பாதுகாக்கிறது. நாடி சக்தியின் மூலம் மேல் துருவ எழுச்சியை மேற்கொள்ளும் குண்டலினி சக்தி பேரின்ப நிலைக்கு இட்டுச் செல்கிறது. தனித்தனியாக பகுதி பகுதியாக, நமது உடம்பிற்குள் ஆயிரம் உறுப்புகள் இருந்தாலும், அவைகள் அனைத்திற்கும் மூல கருவாக இருப்பது குண்டலினி சக்தியே ஆகும். இந்த பேரின்ப சக்தி, எழுச்சியை அடையாமல் இருக்கும் நேரம் மூலாதாரத்தில் உறங்குவது போல் படுத்துக்கிடக்கிறது. அதனால், மூலாதாரத்தை குண்டலினி சக்தியின் கருவறை எனலாம். இதே குண்டலினி ஆதிசேஷன் போல் வீறு கொண்டு எழுந்தால், சகஸ்ரத்தில் படமெடுத்து ஆடுகிறது. அதனால் குண்டலினியின் ராஜகோபுரம் சகஸ்ரம் எனலாம்.

ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், தீயிலிருந்து நீரும், தண்ணீரிலிருந்து நிலமும் உண்டானதாக உலக உற்பத்தி பற்றி இந்திய வேதங்களும், உபநிஷதங்களும், ஞான நூல்களும் கூறுகின்றன. இந்த பூதங்கள், பிரளய காலம் என்ற அழிவு நேரத்தில் நிலம், நீரிலும் நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று ஆகாயத்திலும், ஆகாயம் பரவெளியான பிரபஞ்சத்திலும் கலக்கிறது. இந்த இயற்கை நிகழ்வை குண்டலினி அப்படியே தனது செயல்பாடாகவும் கொண்டிருக்கிறது. அதனால், தான் சித்தர்கள் அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உண்டு பிண்டத்தில் உள்ளது அண்டத்தில் உண்டு என்கிறார்கள்.

குண்டலினி சக்தி மூலாதாரத்திலிருந்து கிளம்பி, சகஸ்ரத்தை சுழுமுனை நாடி வழியாக சென்று அடையும் போது, ஆறு ஆதாரங்களை கடந்து செல்வதாக சொன்னேன். மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாதகம், விசுக்தி, ஆக்ஞா ஆகிய ஆறு ஆதாரங்களை முறையே நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் மனம் என்று யோக சாஸ்திரம் உருவாக பெயரிட்டு அழைக்கிறது.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 9442426434








அனைத்து ஆன்மிக செய்திகளையும் உங்கள் மொபைல், டேப் போன்றவற்றிலும் 24x7 மணிநேரமும் பார்த்து பயன்பெறலாம்

GET IT ON Google Play

கூகுள் ப்ளே ஸ்டோரிலிருந்து ஆன்மிகமலர் Aanmeega malar (mobile app) டவுண்லோடுசெய்து, ஆன்மிக செய்திகள், உடல்நலன், பலன்கள், இ-புத்தகம் போன்றவற்றை எளிதாக படிக்கலாம். சிறிய, பெரிய எழுத்துக்களில் பெரியவர்களும் தெளிவாக படிக்கலாம்.

அனைத்து ANDROID சாதனத்திலும் எளிதாக இன்ஸ்டால் செய்யலாம்

# மஹா பெரியவா அருளுரை

ஒரு மரத்திலே புஷ்பத்திலிருந்து தான் காயும், பழமும் உண்டாகின்றன.

• • •

புஷ்பமாக இருக்கும் போது மூக்குக்கும், பழமாக இருக்கும் போது நாக்குக்கும் ரஸமாக இருக்கின்றன.

• • •

பழம் நல்ல மதுரமாக இருக்கிறது. இந்த மதுரம் வருவதற்கு முன் எப்படி இருந்தது? பூவில் கசப்பாகவும், பிஞ்சில் துவர்ப்பாகவும், காயில் புளிப்பாகவும், கனியில் மதுரமாகவும் இருக்கிறது.

• • •

மதுரம் என்பது தான் சாந்தம்.. சாந்தம் வந்தால் எல்லாப் பற்றும் போய் விடுகிறது.. பழத்தில் மதுரம் பூராவாக நிரம்பிய உடனே கீழே விழுந்து விடுகிறது.. அது போல், இருதயத்தில் எல்லா இடத்திலும் மதுரம் வந்து விட்டால் தானாகவே எல்லாப் பற்றும் போய் விடும்..

• • •

புளிப்பு இருக்கும் வரை பற்றும் இருக்கும்.. அப்போது காயைப் பறித்தால் காம்பில் ஜலம் வரும். காயிலும் ஜலம் வரும். அதாவது, மரமும் காயை விட்டு விட விரும்பவில்லை. காயும் மரத்தை விட்டு விட விரும்பவில்லை.



• • •

ஆனால், நிறைந்த மதுரமாக ஆகிவிட்டால், தானாகவே பற்றும் போய் விடும். பழமும் இற்று விழுந்து விடும். அதாவது, மரமும் பழத்தை வருந்தாமல் விட்டு விடுகிறது. பழமும் மரத்தைப் பிரிய வருந்துவதில்லை.

• • •

படிப்படியாக வளர்ந்து மதுர மயமாக ஆகிவிட்ட ஒவ்வொருவனும் இப்படியே ஆனந்தமாக சம்சார விருட்சத்திலிருந்து விடுபட்டு விடுவான்.

• • •

பழமாக ஆவதற்கு முன் ஆரம்ப தசையில் புளிப்பும், துவர்ப்பும் எப்படி வேண்டியிருக்கின்றனவோ, அதைப் போல காமம், வேகம், துடிப்பு எல்லாம் வேண்டியிருக்கின்றன.

• • •

இப்போது இன்ன உணர்ச்சி வந்ததே! ஆசை வந்ததே! கோபம் வந்ததே! பெருமை வந்ததே! பொய் வந்ததே! இதனால் ஏதாவது பிரயோஜனம் உண்டா? இந்த உணர்ச்சி அவசியமாக வருகிறதா? அனாவசியமாக வருகிறதா? என்று நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படி நினைக்கவில்லை என்றால் அவை நம்மை ஏமாற்றி விடும், ஏமாந்து விடுவோம்.

• • •

புளிப்பு இருக்க வேண்டிய சமயத்தில் புளிப்பு வேண்டும், துவர்ப்பு இருக்க வேண்டிய சமயத்தில் துவர்க்க வேண்டும்.

• • •

ஆனாலும், அந்தந்த நிலையோடு நிற்காமல், பிஞ்சு படிப்படியாகப் பழமாகிக் கொண்டே வருவதைப் போல, நாமும் மேலும் மேலும் மாதுரியமான அன்பையும், சாந்தத்தையும் நினைத்துக் கொண்டே வந்தால் நாமாகப் போய் மோட்சத்தைத் தேட வேண்டாம்.

• • •

எந்தப் பருவத்தில் எப்படி இருக்க வேண்டுமோ அப்படி இருந்தால், தானாகவே மோட்சம் என்ற மதுர நிலை வந்து விடும்...

இவற்றிலிருந்து நாம் ஆரம்ப தசையில் பூரணமாக விடுபட முடியாது. ஆனாலும் இவை எல்லாம் ஏன் வருகின்றன? என்று அடிக்கடி நினைத்தாவது பார்க்க வேண்டும்...

• • •

○ ஆன்மிகம் ○ தத்துவம் ○ உடல்நலம் ○ பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 08825844033



www.aanmeegamalar.com
www.aanmeegamalar.com

# மின்னூல் வடிவத்தில்

ஆன்மிகமலர் மெயில் புத்தகத்தின்
அனைத்து பிரதிகளையும் படித்து மகிழ...

ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம்

www.aanmeegamalar.com

MAGZTER
DIGITAL MAGAZINE STORE
TAP · READ · ENJOY

இணையதளங்களை பார்க்கவும்...

aanmeegamalar.com
இணையதளத்தின் செய்திகளை

உலகின் அனைத்து
மொழிகளிலும்
செய்திகளைத் தரும்

dailyhunt

மொபைல் அப்பில் உடனுக்குடன்
தெரிந்து கொள்ளலாம்.